Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ராம்கோ ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
(சி-553)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மாசி 03 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்ஹிஜ்ஜா 12 (15.02.2003) சனிக்கிழமை இதழ் :136

# அரச பகுப்பாய்வு திணைக்களத்தில் நேற்றிரவு திடீரென மூண்டது தீ!

## ரத்வத்தவுக்கு எதிரான ஆவணங்கள் அழிந்ததா?

(சம்பவ இடத்திலிருந்து நமது நிருபர்)

**கொழும்பிலுள்ள அரசாங்க பகுப்பாய்வுத் திணைக்களத்தில் நேற்றிரவு திடீரெனப் பெரும் தீ பரவியது. இதனால் இத்திணைக்களத்தின் முக்கியமான ஆவணங்கள் பல தீயில் எரிந்து அழிந்துள்ளன. இதில், முன்னாள் அமைச்சர் ரத்வத்த மீதான வழக்கின் முக்கிய ஆதாரங்களும் எரிந்ததா? எனச் சந்தேகம் எழுந்துள்ளது.**

கொழும்பு ரொறிங்டன் பிளேசில் அமைந்துள்ள பகுப்பாய்வுத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில், நேற்றிரவு பத்து மணியளவில் திடீரெனத் தீ பரவ ஆரம்பித்தது.

இதனைத் தொடர்ந்து, தீயணைக்கும் படையினருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. இரவு 10.30 மணியளவில் தீயணைக்கும் படையினர் அப்பகுதிக்கு விரைந்து வந்த சமயம், கட்டடத்தின் உட்பகுதியில் தீ சுவாலைவிட்டு எரிந்து கொண்டிருந்தது. தீயணைப்புப் படையினர் நாலாபக்கமும் சுற்றி நின்று தீயை அணைக்கும் முயற்சியில் இறங்கினர்.

இக்கட்டடத் தொகுதிக்கான மின்சாரம் உடனடியாகவே துண்டிக்கப்பட்டது. தீ அணைக்கும் படைப்பிரிவினர் ஒரு கட்டத்தில் உள்ளே நுழைய முடியாதவாறு தீ பரவிக் கொண்டிருந்தது. இத்திணைக்களத்தில் மிக முக்கிய ஆவணங்களைக் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருக்கும் 'Dark Room' என்ற பகுதிக்கும் தீ பரவியதாக எமக்கு நேற்றிரவு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

கடல் போக்குவரத்து, இடுப்புப்பட்டி விவகாரம்

## ஒஸ்ரின் - புறூவ் ஹொவ்டே சந்தித்துப் பேச்சு நடத்தினர்

(கொழும்பு)

புலிகளின் சுதந்திரமான கடல் நடமாட்டம் தொடர்பாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோவும், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ஜெனரல் புறூவ் ஹொவ்டேயும் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தப் பேச்சுக்களின்போது பெண் போராளிகள் இடுப்புப்பட்டி அணிவது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

## இந்தியத் தலையீட்டை ஜப்பானிய அரசு கோராது

### யசூஷி அகாஷி வெளிநாட்டுத் தூதுவர்களிடம் தெரிவிப்பு

ஜப்பானிய விசேட சமாதானத் தூதுவர் யசுஷி அகாஷி - கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள், இராஜதந்திரிகளைச் சந்தித்து சமாதான முயற்சிகளில் ஜப்பானிய அரசாங்கம் செலுத்திவரும் கவனம் குறித்து விளக்கமளித்தார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இச்சந்திப்பில்- அமெரிக்கா, அவுஸ்திரேலியா, பிரித்தானியா, பிரான்ஸ் உள்ளிட்ட பல நாடுகளின் தூதுவர்களும் இராஜதந்திரிகளும் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பின்போது ஜப்பானிய விசேட தூதுவர் யசுஷி அகாஷி கருத்துத் தெரிவித்தபோது,

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு ஜப்பான் முழுமையான ஆதரவை வழங்குகின்றது. இப்பேச்சுக்களில் விடுதலைப்புலிகள் அர்ப்பணிப்புடன் செயற்படுவது பாராட்டுக்குரியது.

ஜப்பானிய உதவிகளைப் பெற

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மானிப்பாய் சம்பவத்தை கண்டித்து யாழ். நகரில் மாபெரும் பேரணி!

### ஜனாதிபதி, யாழ். இராணுவத்தளபதி கொடும்பாவிகள் எரிப்பு

மானிப்பாய் பகுதியில் விடுதலைப் புலிகளின் பெண் போராளி



எரியும் கொடும்பாவிகள்




கறுப்பு இடுப்புப் பட்டியுடன் பேரணியில் பெண்கள்

கள் மீதும், பொதுமக்கள் மதும், பத்திரிகையாளர்கள் மீதும் இராணுவத்தினர் நடாத்திய கடுமையான தாக்குதலைக் கண்டித்து - நேற்று பல்வேறு பொது அமைப்புக்களும், மகளிர் அமைப்புக்களும், மாணவர்களும், பொதுமக்களும் இணைந்து மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை, யாழ். நகரில் நடாத்தியதுடன், ஜனாதிபதியினதும் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவினதும் கொடும்பாவிகளையும் எரித்தனர்.

நேற்றுக்காலை யாழ். பொது நூலகம் முன்பாக ஒன்று திரண்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் கூட்டுறவு, திணைக்கள, மாநகர சபை ஆகியவற்றின் ஊழியர்கள, கல்வியியற் கல்லூரி மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் ஆகியோர்- காலை 10.30 மணியளவில் யாழ். பொது நூலக வாசலிலிருந்து ஜனாதிபதி சந்திரிகாவினதும், வடபகுதி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன் சேகாவினதும் கொடும்பாவிகள் பொருத்தப்பட்ட முச்சக்கரவண்டி முன்செல்ல, அதன்பின் பேரணியாகப் புறப்பட்டனர்.

இதன்போது, கறுப்பு இடுப்புப் பட்டிகளை அணிந்த பெண்கள் முன்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவு அசம்பாவிதம் குறித்து ஜனாதிபதிக்கு மாரப்பன விளக்கம்

நெடுந்தீவுக் கடற்பரப்பில் மூன்று விடுதலைப் புலிகள் உயிரிழந்த விவகாரம் குறித்து பாதுகாப்பு அமைச்சர் ஜனாதிபதிக்கு விளக்கமளித்துள்ளார்.

இந்த விளக்கம் அடங்கிய கடிதம் நேற்று ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், அதில் அடங்கியுள்ள விடயங்கள் தொடர்பாக எவ்வித தகவல்களும் வெளியாகவில்லை.

நெடுந்தீவுப் பிரச்சினை சம்பந்தமாக பாதுகாப்பு அமைச்சர் உரிய பொறுப்புடன் செயற்படவில்லை என அண்மையில் ஜனாதிபதி குற்றம் சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (01)

## வடமராட்சியில் கொடும்பாவிகள் எரிப்பு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி சந்திரிகா, யாழ். மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சரத்பொன்சேகா ஆகியோரின் கொடும்பாவிகள் நேற்று வடமராட்சியில் மூன்று இடங்களில் எரிக்கப்பட்டன.

மானிப்பாயில் பெண் போராளிகளிடமிருந்து பலவந்தமாக இடுப்புப் பட்டிகள் அறுத்தெடுக்கப்பட்டமையைக் கண்டித்தும், இராணுவத்தினரின் நடவடிக்கைக்கு ஆதரவு தெரிவித்துவரும் ஜனாதிபதிக்குத் தமிழ் மக்களின் எதிர்ப்புக்களைத் தெரிவிக்கும் வகையிலும் கொடும்பாவிகள் எரிக்கப்பட்டன.

வடமராட்சி வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம், மற்றும் பொது அமைப்புக்கள் இதனை ஏற்பாடு செய்திருந்தன.

நேற்று மாலை 2 மணிக்கு இரு

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



சிக்கிச் சிறைக்குள்ள இருந்தாலும் சீமான் தலைகரணமா தப்பிறதுக்குத்தான் வழிதேடுறாரோ...?

## ஈ.பி.டி.பி. அலுவலகம் மீது குண்டு வீச்சு!

பருத்தித்துறை ஈ.பி.டி.பி. அலுவலகம் மீது நேற்றுமுன்தினம் இரவு கைக்குண்டுவீச்சுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு கைக்குண்டுகள் வீசப்பட்டபோதும் ஒரு குண்டே வெடித்ததாகவும் மற்றைய குண்டு வெடிக்காததனால் இராணுவத்தினரால் அது செயலிழக்கச் செய்யப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003
இன்றைய ஆட்டங்கள்
ICC Cricket World Cup

| | |
|---|---|
| அவுஸ்திரேலியா Vs இந்தியா | - Super Sport Park - Centurion - 2 p.m. |
| கென்யா Vs கனடா | - Newlands, Capetown - 6.30 p.m. |

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
(சி -518) 021-2223916, 0777-517019, 01-505632, 074-612656, 01-390128.

# இன்றைய நாள் இனிய நாள்

**15-02-2003 - சனிக்கிழமை**

| | |
|---|---|
| மேடம் | :- இல்லச் சிறப்பு, தொழிலில் அமோக வெற்றி, களஸ்திர சுகம், தேகமெலிவு |
| இடபம் | :- தலைவலி, மனக்கவலை, பொருட்சேதம், அன்னிய உதவி. |
| மிதுனம் | :- அதிக பிரயாசை, தொழில் விருத்தி, வாக்கு வசீகரம், இனசன விரோதம். |
| கர்க்கடகம் | :- பணவரவு, பிரயாணத்தால் நன்மை, பொருள் வரவு, இல்லச்சிறப்பு. |
| சிங்கம் | :- பெரியோர் மதிப்பு, தான தருமம், வாகன சுகம், பேரும் புகழும் கிடைத்தல் |
| கன்னி | :- பூமிலாபம், தேகசுகக் குறைவு, புத்திரரால் நன்மை, |

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

| | |
|---|---|
| துலாம் | :- தேகமெலிவு, தாழ்ந்த நிலை, தொழில் .சமபலன். |
| விருச்சிகம் | :- சௌபாக்கியம், களஸ்திர சுகம், குடும்பச் சிறப்பு, அதிக செலவு. |
| தனு | :- நோய், விரோதம், உறவினரால் நன்மை, மனமகிழ்ச்சி. |
| மகரம் | :- பொருள்வரவு, இனசனக் கொண்டாட்டம், வாகன இலாபம், குடும்ப சிறப்பு. |
| கும்பம் | :- சோம்பல், தேகமெலிவு, சிநேகிதர் உதவி, பொருட்சேதம். |
| மீனம் | :- வீண்பழி கேட்டல், தேக சுகம், தனதானிய விருத்தி. |



**MODERN EDUCATION CENTRE**

**NELLIADY**

**G.A.Q. துரித மீட்டல் வகுப்புக்கள்**

**ஆரம்பமாகின்றன**

**15.02.2003**

| | |
|---|---|
| மெய்யியல் | - திரு.நவம் |
| அரசியல் | - திரு.மனோகரன் |
| பொருளியல் | - திரு.லோகசிங்கம்<br>திரு.செல்வரட்ணம் |
| தமிழ் | - திரு.முரளி |
| நா. அரங்கியல் | - திரு.கனகேஸ்வரன் |
| இந்து நாகரிகம் | - திரு.ஜோதீஸ்வரன்<br>திரு.மகிந்தன் |
| கிறிஸ்தவம் | - திரு.செபநேசன் |
| ஆங்கிலம் | - திரு.சண் |
| வர்த்தகம் | - செல்வி சிவரூபி |

**2005 A/L கலை, வர்த்தகப் பிரிவுகள்**

**நடைபெறுகின்றன**

(சி-588)



**மனோதத்துவ வைத்தியம்**

பிரபல மனோதத்துவ வைத்தியர்

திரு. ஆறுமுகம் அவர்கள்

இம்மாதம் 18ஆம் திகதிவரை யாழ்ப்பாணத்தில் சந்திக்கலாம்.

ஆரம்ப நிலையிலுள்ள மனநிலை பாதிப்புகள் உடன் சுகமாக்கப்படும் மற்றும் எல்லாவித வியாதிகளுக்கும் மனோதத்துவ வைத்திய சிகிச்சையளிக்கப்படும்.

**A.S.N. சுற்றுலா விடுதி.**

392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

T.P. - 021-222 3181/5399

0777 569205.

(சி-592)


# இசற் புள்ளி, மாவட்ட கோட்டா தொடர்ந்து நடைமுறையில்

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக அனுமதிக்காகப் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட "இசற் ஸ்கோர்" முறை எந்தக் காரணத்தைக் கொண்டும் மாற்றப்பட மாட்டாது என்று தேசிய ஆணைக்குழுவின் பிரதித் தலைவர் பேராசிரியர் கே.டி.அருட்பிரகாசம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - மாவட்டக் கோட்டா முறை தொடர்ந்து இருக்கும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத் தெரிவிக்குழு தலைமையில் இடம்பெற்ற கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டதாக பேராசிரியர் அருட்பிரகாசம் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# சங்கானையில் நடமாடும் வங்கிச் சேவை

சங்கானை மக்கள் வங்கிக் கிளையின் நடமாடும் வங்கிச் சேவை அண்மையில் சங்கரத்தைச் சந்தியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நடமாடும் வங்கிச் சேவை, பிரதி செவ்வாய் தோறும் சங்கரத்தையில் இடம்பெற்று வருகிறது. இதனால் வட்டுக்கோட்டை, சங்கரத்தை, மூளாய், அராலி ஆகிய பகுதி மக்கள் தமது வங்கி தொடர்பான நடவடிக்கைகளை இலகுவாக மேற்கொள்ளக்கூடியதாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.


**சிறு விளம்பரம்**

**விற்பனைக்கு உண்டு**

நல்ல நிலையிலுள்ள Mitsubishi Delica L 300 முழு ஆசனங்கள் 750 g விற்பனைக்கு உண்டு. விலை 350,000 ரூபா. T.V.S. Cham. ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு: 783, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P. 2222841. (245)



**THE ROYAL COLLEGE OF JAFFNA**

SPOKEN ENGLISH WITH GRAMMER

N.VIGNESWARAN ARCHERY

BLACK ROAD, CHANKANAI

426 (302), K.K.S. ROAD,

JAFFNA.

(சி/546)



**நிரஞ்சனாஸ்** சங்கானை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

மாதவன், மீரா ஜஸ்மின் நடித்த

**ரன்**

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 காட்சி

THE MUMMY RETURNS

(சி-544)



**ராஜா** யாழ்ப்பாணம்.

5 ஆவது வாரமாக

விஜய், ஸ்நேகா, மணிவண்ணன், வடிவேல் நடித்த



**வசீகரா**

10.30, 2.30, 6.00,

நாளை ஞாயிறு - 9.30

போயா தினம் காட்சிகள் காண்பிக்கப்படமாட்டாது.

(சி-545)



**ஸ்ரீமுருகன் ஸ்தாபனத்தினரின் மற்றும் பல சேவைகள்**



**Inter Net மூலம்**



உங்கள் உறவினர்களுடன் உரையாட துல்லியமாகவும் துரிதமாகவும் குறைந்த கட்டணத்தில்



இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில் துரித தபால்/பொதிகள் சேவை

மற்றும்

யாழ். - கொழும்பு பிரயாண சேவை

தொலைபேசி வசதிகள், பக்ஸ் (Fax), போட்டோப் பிரதி, Computer Type Setting, தபாற்சேவைகள் யாவற்றையும் பூர்த்தி செய்துகொள்ள நாடுங்கள்.

**ஸ்ரீ முருகன் தொலைத் தொடர்பகம்**

**SRI MURUGAN**

**Tele Communication, Computer System & Agency Post Office,**

**303, K.K.S. ROAD, JAFFNA.**

T.P. 021-2222670, 2223588 FAX: 021-2223214

E.Mail: del.Smskr@eureka.lk

(சி-591)


# மதிலுடன் ஓட்டோ மோதி பெண் ஒருவர் படுகாயம்

(கொழும்புத்துறை)

ஓட்டோ ஒன்று மதிலோடு மோதியதில் பெண் ஒருவர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று யாழ்ப்பாணப் பகுதியில் இடம்பெற்ற மேற்படி சம்பவத்தில் கொழும்புத்துறையைச் சேர்ந்த பஞ்சலிங்கம் தர்வேயி (வயது 59) என்பவரே படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (60)


## 'Selection of School Furniture Suppliers'

**'GTZ-International Services Asia,** on behalf of the donor Agency, the **EU,** gives hereby notice for pre-selecting **School Furniture Suppliers** for the **'Rehabilitation of Schools in Jaffna'**

At the moment the GTZ - International Services Asia is rehabilitating about 55 Schools within the Jaffna District. For these Schools the supply of the following furniture is required.

- Student tables and chairs, Type A, B and C (allover approx.4000 sets)
- Teacher's tables and Chairs (approx.100 sets)
- Wooden partition screens (approx. 100 units)
- Wooden black boards (approx. 40 units)

If it's not feasible for a supplier to provide the complete number of furniture, the supply contract could be broken down in appropriate shares. The furniture will have to be supplied to the locations given by the GTZ - International services Asia distributed in all five educational zones. Under the pre-condition of the Donor, a very Short time frame is given. Detailed **'project Informations'** are available from the **'Project office'** at 521/11, Point Pedro Road, Nallur, Jaffna.

Reputed and Experienced **'Furnture Suppliers'** with professional key-management, with substantial financial Capacity, with a good and adequate skilled and unskilled labour force on hand, with the ability to produce and deliver fast, are herewith invited to register with the GTZ - IS at the given office address. Latest registration date shall be one week from date of publication.

**Project Manager,**
**GTZ - International Services Asia.**

## பாடசாலை தளபாட உபகரண வழங்குநர்களை தெரிவு செய்தல்

**G.T.Z. சர்வதேச நிறுவனம் (ஆசியா), நன்கொடையாளர்கள், ஐரோப்பிய ஒன்றியம் சார்பில் யாழ்ப்பாணத்தில் பாடசாலைகளின் புனரமைப்புக்காக, பாடசாலைத் தளபாட உபகரண வழங்குநர்களைத் தெரிவு செய்யவுள்ளது.**

G.T.Z. சர்வதேச நிறுவனத்தினால் (ஆசியா) தற்பொழுது யாழ்.மாவட்டத்தில் சுமார் 55 பாடசாலைகள் புனரமைக்கப்படுகின்றன. இப்பாடசாலைகளுக்கு பின்வரும் உபகரண வழங்கல் வேண்டப்படுகின்றது.

- மாணவர்களுக்கான மேசை, கதிரை வகை, A, B, C (மொத்தம். 4000 தொகுதிகள்)
- ஆசிரியர்களுக்கான மேசை, கதிரைகள் (மொத்தம் 100 தொகுதிகள்)
- வகுப்பறைகளை பிரிக்கும் மரத்தினாலான தட்டிகள் (100 அலகுகள்)
- மரத்தினாலான கரும்பலகைகள் (40 அலகுகள்)

- மேற்குறிப்பிட்ட சகல தளபாட உபகரணங்களையும் குறிப்பிட்ட ஒரு வழங்கல் ஒப்பந்தக்காரரால் விநியோகிப்பது சாத்தியமற்றதெனின் வழங்கல் ஒப்பந்தமானது ஒதுக்கீட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.
- G.T.Z. சர்வதேச நிறுவனம் (ஆசியா) ஆல் குறிப்பிடப்பட்ட 5 கல்வி வலயங்களில் உள்ள பாடசாலைகளுக்கு வழங்கலை மேற்கொள்ளக்கூடியதாக இருத்தல் வேண்டும்.
- நன்கொடையாளர்களின் முன்நிபந்தனைகளின் கீழ் மிகக்குறுகிய காலவரையறையே தரப்படுவதால் விரிவான **திட்ட தகவல்களை** இல 521/11, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள **திட்ட அலுவலகத்தில்** இருந்து பெற்றுக்கொள்ளலாம்.
- **குறித்த வழங்குநர்கள** பிரசித்தி பெற்ற, சிறந்த அனுபவமுள்ள, தொழில்சார் முகாமைத்திறன், நிதிசார் திறன் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.
- போதுமான, சிறந்த திறன்/திறனற்ற ஊழியப்படையினரை கொண்டிருத்தல் வேண்டும்.
- உடனடியாக உற்பத்தி செய்து விநியோகம் செய்யக்கூடிய ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட தகைமைகளை உடையோர் மேற்குறிப்பிட்ட காரியாலயத்தில் பதிவுகளை மேற்கொள்ள அழைக்கப்படுகின்றார்கள். இறுதிப்பதிவுத் திகதியானது பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒருவார காலமாகும்.

திட்ட முகாமையாளர்,
G.T.Z. சர்வதேச சேவைகள் நிறுவனம் (ஆசியா).

(சி/589)

# மீள் குடியமர்வு தொடர்பாக அரசிடம் ஜப்பான் அறிக்கை கோரியுள்ளது!

## இதனடிப்படையிலேயே நிவாரணம் என்கிறார் அகாஷி

புரிந்துணர்வு உடன்படிக்கையை அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் மீறாமல் செயற்படவேண்டும் அதற்கான அறிவுறுததல்களையும், ஆலோசனை களையும் ஜப்பான் வழங்கியுள்ளது என்று ஜப்பான் விசேட தூதுவர் யசுஷி அகாஷி தமிழ்க்கட்சிக் கூட்ட மைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்க ளிடம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஜப்பான் தூதுவரின் இல்லத்தில் தமிழ்க்கட்சி நாடாளுமன்ற உறுபபினர்கள் யசுஷி அகாஷியைச் சந்தித்தபோதே, அவர் இதனைத் தெரிவத்தார். சமாதானப் பேச்சுவார்த்தை, புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகள் குறித்த பல்வேறு விடயங்கள் இச்சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர்களான வீ.ஆனந்தசங்கரி, அ.விநாயகமூர்ததி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சந்திரநேரு, தங்கவடிவேல், சிவசக்தி ஆனந்தன் ஆகியோரே அகாஷியைச் சந்தித்தனர்.

அங்கு கருத்து வெளியிட்ட யசுஷி அகாஷி - அரசியற்தீர்வு குறித்த பேச்சு வார்த்தைகளில் அரசாங்கமும், விடு தலைப்புலிகளும் இனிமேல் கவனம் செலுத்தவேண்டும். அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் அவ்வாறு கவ னம் செலுத்துவார்கள் என்ற நம் பிக்கையுள்ளது என்றார்.

தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பாக விளக்கிக்கூறிய கூட்ட மைப்பு உறுப்பினர்கள் -

மக்கள் வாழும் பிரதேசங்களை உயர்பாதுகாப்பு வலயம் என இராணு வம் பிரகடனப்படுததியுள்ளது. இதனால் அங்கு மக்கள் மீளக்குடியுயேற முடி யாதநிலை ஏற்பட்டுள்ளது என எடுத் துக் கூறினார். அதற்குப் பதிலளித்த அகாஷி - மீள குடியேற்றம் தொடர் பாக அரசாங்கம் அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும் என கேட்கப்பட் டுள்ளது. அப்போதுதான் உரியமுறை யில் நிவாரணம் வழங்கமுடியும் என அரசாங்கத்திடம் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

எவ்வாறாயினும் கூடியவிரைவில் மீள் குடியேற்ற விவகாரங்களை அர சாங்கம் சரியானமுறையில் கையா ளும் என்ற நம்பிக்கையுள்ளது என்று



கூறிய அகாஷி, சமாதான்ப் பேச்சு வார்த்தை தொடர்பாக எதிர்கட்சியி னர் கொண்டுள்ள மாற்றுக் கருத்துக் கள் பற்றிக் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை என்றும் கூறினாா.

## தீ விபத்தில் பெண் காயம்

(யாழ்ப்பாணம்)

தவறுதலாக ஏற்பட்ட தீ விபத்தல் குடும்பப் பெண் ஒருவர் எரிகாயங்களுக் குள்ளான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட டுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் பூனைத்தொடுவா யைச் சேர்ந்த ஜெயராசா அனிஸ்ரா (வயது 38) என்பவரே எரிகாயங்களுக் குள்ளாகி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றார்.

(ச)

## கொட்டடிச் சந்தையில் அழிக்கப்பட்டது பன்றி இறைச்சி

(யாழ்ப்பாணம்)

கொட்டடிச் சந்தையில் அங்கீகார மற்ற பன்றி இறைச்சி விற்பனை செய்யப்படுவதாகக் கிடைத்த தக வலை அடுத்து அங்குசென்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பன்றி இறைச் சியைக் கைபபற்றி அழித்தார்.

இவ்வாறு பன்றி இறைச்சியை வாங்கி உண்பதைத் தவிர்த்துக் கொள் ளுமாறு யாழ. மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரி யதாசன் கேட்டுக்கொண்டுள்ளார்.

(100)

## திலக் மாரப்பனவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப பனவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றில் எதிர் வரும் 18 ஆம் திகதி விவாதிக்கப் படவுள்ளது.

சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தலைமையில் நாடாளுமன் றக் கட்டடத் தொகுதியில் நேற்று முன் தினம் நடைபெற்ற கட்சித் தலைவர் களின் கூட்டத்திலேயே, நம்பிக்கை இல்லாப் பிரேரணை மீதான விவா தம் நடத்துவது பற்றித் தீர்மானிக்கப் பட்டது.

நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொண்ட இந்தக் கூட்டத்தில் மக்கள் விடுதலை முன்னணி தவிர்ந்த ஏனைய கட்சிகள் அனைத்தும் பங்குபற்றின.

## விடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் -திரைப்பட வட்ட மும் இணைந்து வழங்கிவரும் திரைப் படக்காட்சித் தொடரில் தங்கர்பச் சான் இயக்கிய "சொல்ல மறந்த கதை" வீடியோப் படக்காட்சி, நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு புவியியற்றுறை மண்டபத் தில் காண்பிக்கப்படவுள்ளது.

## இரவில் பேய் போன்று நடித்து சொக்லெட் திருடியவர் சிக்கினார்

முன்னணி சொக்லெட் நிறுவனமொன்றில் திட்டமிட்டுச் சொக்லெட்களைத் திருடிவந்த ஊழியர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

முன்னணி சொக்லெட் தயாரிப்பு நிறுவனமொன்றின் கொகுவெல தொழிற் சாலையில் வேலைபார்த்த ஊழியரே திருட்டுத் தொடர்பாகக் கைதாகியுள் ளார்.

இந்த ஊழியர் தொழிற்சாலையில் இருந்து சொக்லெட் தயாரிப்புக்கான மூலப்பொருட்களையும், பொதியிடும் தாள்களையும் மட்டுமன்றி, சொக்லெட் உற்பத்தி செய்யும் சிறிய இயந்திரம் ஒன்றையும்கூடத் திருடிச் சென் றுள்ளார்.

அவரிடம் தொழிற்சாலையின் அனைத்துக் கதவுகளுக்கும் உரிய போலி யான சாவிகள் இருந்துள்ளன. இவற்றைக்கொண்டு இரவு வேளைகளில் தொழிற சாலைக்குள் புகுந்து திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்திருக்கிறார்.

இரவில் காவலாளிகள் எதிர்ப்பட்டால் பேய்போன்று நடித்து அவர்களை இவர் பயமுறுத்தியதாகவும் தெரியவருகின்றது.

இந்த ஊழியரின் வீட்டைப் பொலிஸார் சோதனையிட்டபோது, அங்கிருந்து சிறிய சொக்லெட் தயாரிப்பு இயந்திரம், இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான 2000 துண்டு சொக்லெட்கள் மற்றும் மூலப்பொருட்கள் என்பன மீட்கப்பட்டிருக கின்றன.

அந்த ஊழியரைப் பொலிஸார் கைதுசெய்து தடுத்துவைத்து விசாரணை செய்துவருகின்றனர்.

## திருத்தம் மேற்கொள்ளப்படாமையால் கைவிடப்பட்ட நிலையில் விமானங்கள்

இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான விமா னங்கள் மீது உரிய காலத்தில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படாதிருப்பதால் பன்னிரண்டுக்கும் மேற் பட்ட விமானங்களைப் பாவனையில் இருந்து நீக்க வேண் டியிருப்பதாக விமானப்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த விமானப் படையின் பேச்சாளர்,

விமானங்களைத் திருத்துவதற்குப் போதிய நிதி கிடைக்கவில்லை என்றும் - திருத்துவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

இதனால் சி-130 ரகத்தைச் சேர்ந்த இரண்டு விமா னங்களும், அன்ரனோவ் 32 ரகத்தைச் சேர்ந்த 4 விமானங்களும், கிபிர் குண்டு வீச்சு விமானங்கள் இரண் டும், நான்கு எம்.ஐ 24 ரக தாக்குதல் ஹெலி கொப் டர்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட முடியாத நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பாடசாலை சிறார்களுக்கு எய்ட்ஸ் நோய் விழிப்புணர்வு!

### அவசியம் என வலியுறுத்து

பாடசாலைச் சிறார்கள் மத்தி யில் எயட்ஸ் நோய் தொடர்பான விழிப் புணர்வை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு கல்வி அமைச்சையே சாரும் என்று தேசிய எச்.ஐ.வி.தடுப்பியக்கத்தின் தலைவர் டாக்டர் ஹிராந்தி அபே விக்கிரம தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

பாடசாலைச் சிறார்கள் மத்தியில் எய்ட்ஸ் நோய் குறித்த எச்சரிக்கை செய்யப்பட வேண்டிய கட்டாயம் எழுந்திருக்கின்றது. அண்மையில் யுனிசெவ் வும், ஐ.நாவின் எயட்ஸ் தடுப்பு அமைப்பும் இணைந்து பாடசாலைச் சிறார் கள் மத்தியில் நடத்திய ஆய்வில், 9 ஆம் ஆண்டில் கல்விகற்கும் 63 சத வீதமான மாணவர்கள் எயிட்ஸ் பரவும் முறைகளை அறியாதுள்ளமையுடன், எய்ட்ஸ் பரவும் முறைகளில் ஒன்றையேனும் குறிப்பிட முடியா திருந்தனர்.

75 சதவீதமான மாணவர்களுக்கு எய்ட்ஸ் நோயில் இருந்து எப்படி பாதுகாத்துக் கொள்வது என்பது தொடர்பான அறிவு இல்லாதுள்ளனர்.

இதனால், எயட்ஸ் நோய் தொடர்பான விழிப்புணர்வை மாணவர்கள் மத்தியில் கல்வி அமைச்சு ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என வும் - எயட்ஸ் நோய்த் தடுப்பு இயக்கத் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## உள்ளக சுயநிர்ணய உரிமை தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டும்

### வாசுதேவ நாணயக்கார கருத்து

அரசாங்கத்துக்கும்-தமிழீழ விடு தலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் வெற்றிகர மாக நடைபெற்று வருகின்றபோதும்- இந்தப் பேச்சுக்களின் விளைவுகள், நன்மைகள் குறித்து மக்கள் மத்தி யில் தெளிவாக எடுத்துக் கூறப்பட வில்லை எனப் புதிய இடதுசாரி முன்ன ணியின் தலைவர் வாசுதேவ நாணயக் கார தெரிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சுக்களின் நன் மைகள், மக்கள் மத்தியில் தெளி வாக விளங்கப்படுத்தப்பட வேண் டும். அப்போதுதான் சமாதானத்தை நிலைநிறுத்த முடியும்.

பொதுஜன ஐக்கிய முன்னணியி லுள்ள அநுரா பண்டாரநாயக்க, மங்கள சமரவீர, நிமால் சிறிபால டி சில்வா போன்றோர்தான் சமாதான முயற்சிகளைக் கண்டபடி விமர்சனம் செய்கின்றனர். ஆனால், சமாதான முயற் சிகள் தொடர்பாக இவர்களுக்குள் ளேயே கருத்துக்கள் முரண்படுகின் றன.

இவர்கள் குறுகிய நலன்களுக் காகச் சமாதானப் பேச்சுக்களைக் குழப்ப முனைகின்றார்கள். இதனை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

சமாதானப் பேச்சுக்களின் மூலம் தமிழ் மக்களுக்கு உள்ளக சுய நிர்ணய உரிமை வழங்கப்படுவது



அவசியமானது.

ஆனால், தமிழ் மக்களுக்கு வெளி யக சுயநிர்ணய உரிமை வழங்கப் படக்கூடாது. அது தனி நாட்டுப் பிரி வினைக்கு வழிகோலும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடாகும்.

இதுவரை நடைபெற்ற பேச்சுக் களின் விபரங்கள் வெளியே தெரிய வில்லை. ஆனால், இறுதியான தீர்வு ஒன்று எட்டப்படும்போது அனைத்து மக்களுக்கும் அது தெரியப்படுத் தப்படவேண்டும். இலங்கையில் இனங்களுக்கான தாயகப் பகுதிகள் உள்ளன என் பதைச் சிங்கள மக்கள் ஏற்காவிட்டாலும் - இனரீதியான சுயாட்சி அமைப்பை நிறுவும் உரிமையைச் சிங்களமக்கள் ஏற்றேயாகவேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.





ஆனையிறவுப் பகுதியில் மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் மீட்கப்பட்ட ஒரு தொகுதி வெடிபொருட்கள் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள காட்சியைப் படங்களில் காணலாம்.

# மீனவர் அடையாள அட்டை விநியோகப்பணிகள் ஆரம்பம்

யாழ்.மாவட்டத்திலுள்ள ஆறாயிரம் மீனவர்களுக்கு மீனவர் அடையாள அட்டைகள் வழங்கும் பணி ஆரம்பிக் கப்பட்டுள்ளது.

மீனவர்கள் கடற்தொழிலில் ஈடு படும் வேளைகளில் படையினரிடம் தம்மை மீனவர் என்பதை உறுதிப் படுத்தவும், மீனவர்களுடைய ஏனைய தேவைகளுக்குப் பயன்படுத்துவ தற்கும் வசதியாக கடற்தொழில் நீரி யல்வள அமைச்சு - மீனவர்களுக்கு, மீனவர் அடையாள அட்டைகளை வழங்க ஏற்பாடு செய்திருந்தது.

இதனடிப்படையில் மீனவர் அடை யாள அட்டைக்கு விண்ணப்பித்த மீனவர்களில் ஆறாயிரம் பேருக்கான அடையாள அட்டைகள் கொழும்பில ருந்து எடுத்துவரப்பட்டன.

கடந்த 12 ஆம் திகதி முதல் அந்தந்தப் பிரதேசக் கடற்தொழில் பா சோதகர்களினால் இவை விநியோகிக் கப்பட்டு வருகின்றன.

அதேவேளை, விண்ணப்பித்த மேலும் ஆயிரம் மீனவர்களின் அடை யாள அட்டைகள் இன்னமும் கொழும் பிலிருந்து எடுத்து வரப்படவிருக் கின்றன.

அத்துடன், மீனவர் அடையாள அட்டைக்கு விண்ணப்பித்த சுமார் மூவா யிரம் பேரின் விண்ணப்பங்கள் அடுத்த வாரம் கொழும்புக்கு அனுப்பி வைக் கப்படவிருப்பதாகக் கடற்தொழில் நீரியல்வள திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ச)


## வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்



HAPPY BIRTHDAY

பெயர் :க.இராகுலன்

முகவரி: ஒஸ்கா வீதி, உரும்பிராய் தெற்கு.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------------

முகவரி:------------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளன.

------------------------

பெற்றார் ஒப்பம்


## கீரிமலை நகுலேஸ்வரர் மகோற்சவம்

கீரிமலை ஸ்ரீ நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரசுவாமி திருக்கோவிலில் சித்திரபானு வருஷ மகோற்சவகால வழிபாடும், சிவராத்திரி விழாவும் இம்மா தம் 16 ஆம் திகதி தொடக்கம் மார்ச் மாதம் முதலாம் திகதி வரை நடை பெறவுள்ளது.

தினமும் ஒரு காலப்பூசையும், விசேட காலங்களில் ஹோமத்துடன் கூடிய அபிஷேகபூசை வழிபாடுகளு டன், சிவராத்திரியன்று விசேட ஹோமத துடன் எல்லாச் சாமமும் விசேட அபி ஷேகமும், பக்திபூர்வமான கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற ஏற்பாடாகி யுள்ளது.

தினமும் தெல்லிப்பளை, சேந் தாங்குளம் ஆகிய இருபாதைகள் வழியாகவும் வாகனங்களில் கீரிமலைக்குச் செல்ல முடியும் என் றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# நீரிழிவு நோய் DIABETES

பகுதி 20

- ச.ஆ.கோபாலமூர்த்தி.

### இரத்தசோகையை ஏற்படுத்தும் ஒட்டுண்ணிகள், சிற்றுயிரிகள்

ஒட்டுண்ணிகள் இரத்தத்தையும், போசனைப் பொருட்களையும் உறிஞ்சி இரத்த சோகையை ஏற்படுத்தும். உண்ணிகள் கடிக்கும் போதும், இரத்தசோகை ஏற்படும்போதும் - குமட்டல், உணவில் விருப்பமின்மை, பசி குறைதல் போன்றவை ஏற்படலாம். பசிகுறைவதனால் நீரிழிவு நோயாளிகள் போதிய உணவு உண்ணாவிடில், குளுக்கோஸ் குறைநிலை ஏற்படலாம். அகஒட்டுண்ணிகள், புறஒட்டுண்ணிகள் இரண்டை யும் வைத்தியரின் ஆலோசனைப்படி ஒழித்துவிடவேண்டும். அகஒட்டுண்ணி களை ஒழிப்பதற்கு மருந்து தயாரிக்கும் நிறுவனங்கள் பல்வேறு மருந்துக் குளிகைகளைத் தயாரித்து விற்கின்றன. ஒரு மருந்திற்கு, வெவ்வேறு நிறுவனங்கள் வெவ்வேறு பெயரிட்டு விற்கின்றன. ஒவ்வொரு நிறுவ னத்தின் தயாரிப்பின் விலையும் வேறுபடும். உதாரணம்: மெபெண்டசோல் என்னும் மருந்தை 'வேமெக்ஸ்' என்ற பெயரில் ஒரு நிறுவனமும் 'வேமின்' என்ற பெயரில் வெறொரு நிறுவனமும் தயாரிக்கின்றன. இவை இரண்டினதும் விலை வித்தியாசம் அதிகம். எனவே, கம்பனி மருந்திற்குச் சூட்டிய பெயரைக் (TRADE NAME) கேட்காது, மருந்தின் இயற்பெயரை (PHARMACEUTICAL NAME) வைத்தியரிடம் கேட்டு அறிந்து அவற்றை வாங்கினால் செலவுகுறையும். எந்த மருந்தை வாங்கு வதானாலும், மருந்தின் இயற்பெயரை அறிந்து பாமஸியில் இருக்கும் பல்வேறு கம்பனித் தயாரிப்புகளுள் இலாபகரமானதை வாங்கப் பழகிக் கொள்ளல்வேண்டும். மூட்டைப் பூச்சி நித்திரையைக் குழப்பும். தெள்ளும், நுளம்பும் ஆபத்தானவை. நுளம்பும் ஆபத்தானது. நுளம்பு வலையினுள் படுத்து உறங்குதல் சாலச்சிறந்தது. வெளியே நடமாடும் வேளைகளில் நுளம்புத் தொல்லையை நீக்குவதற்கு, 'பட்டரியில்' இயங்குவதும் 'பாட் மின்ரன்' விளையாடும் மட்டையின் (வலை) அமைப்பில் செய்யப்பட்டது மான நுளம்பு கொல்கருவியை (MOSGUITO KILLING SWATTER) பயன்படுத்தலாம்

நுளம்பு அதிகமாக இருக்கும் இடங்களில், இந்த மட்டைக் கருவியை வேகமாக அசைக்கும்போது, நுளம்புகள் அதிலுள்ள மின்சாரமூட்டிய கம்பி வலையில் ஒட்டி இறந்துவிடும். இதுதவிர, எண்ணைபூசிய தட்டு ஒன்றை யும் பயன்படுத்தலாம். தட்டை அங்கும் இங்கும் வேகமாக அசைக்கும் போது நுளம்புகள் தட்டிலுள்ள எண்ணையில் ஒட்டிவிடும். பின்னர் அவற்றைப் பொறுக்கி அழிக்கலாம். நுளம்புத்திரியிலிருந்து வெளிவரும் இரசாயனப்புகை பலருக்கு ஒவ்வாமையையும், தொய்வையும் ஏற்படுத் துவதால் இதனைத் தவிர்த்தல் நன்று. ஒட்டுண்ணிகளையும், இரத்தம் உறிஞ்சும் பூச்சிகளையும் பொருத்தமானதும், பாதுகாப்பானதுமான முறைகளால் ஒழித்து ஆரோக்கியத்தைப் பேணவேண்டும். இவை கடிக்கும் இடத்தில் சொறிவதால் புண்கள் ஏற்படாது தடுக்கவேண்டும்.

நிலத்திலும், மலத்திலும், குப்பை கூழங்களிலும் இருக்கும் இலையான், கரப்பான்பூச்சி, எறும்பு போன்றவை பல்வேறு நோய்களைப் பரப்புகின்றன. நீரிழிவு நோயாளிக்கு எந்த நோயும் எளிதாகத் தொற்றும். இச்சிற்று யிரிகளை மயங்கவைக்கும் இரசாயனப் பொருட்கள் கலந்த குறுணிகள் (FLY BAITS, COCOROCH BAITS) விற்கப்படுகின்றன.

(தொடரும்)



நமது ஈழநாடு வழங்கும்




## உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

MEGA பரிசுப் போட்டி

முதற்பரிசு - 25,000

வழங்குவோர்: **என்.எஸ். இரத்தினம்**

[இரத்தின கோபால்ஸின் இணைந்த நிறுவனம்]

6, முதலாம் குறுக்குத்தெரு, வவுனியா.

ஃகீறோ ஃகொண்டா மோட்டார் சைக்கிள்களின் வவுனியா விற்பனை முகவர்.

இரண்டாம் பரிசு - 15,000

வழங்குவோர்: **1. ஜொனெக்ஸ் மல்ரி பலஸ்**

YONEX MULTI PALACE

விளையாட்டு உபகரண விற்பனையாளர்கள்.

76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**2. சமுத்திரா ரேட்ஸ் (லிமிட்டட்)**

3/2 ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். தொ.பே. 222 2938

டீசல் என்ஜின், நெல் குற்றும், மா அரைக்கும், இயந்திரங்கள் உதிரிப்பாக விற்பனையாளர்கள்.



மூன்றாம் பரிசு - 10,000

வழங்குவோர்: **சந்தியா மல்ரிகோட்யாட்**

531, பருத்தித்துறை வீதி, நல்லூர், பிரதான வீதி, பண்டத்தரிப்பு

Fancy goods, gift items, fevicryl & acron paint items.



இன்னும் ஏராளமான ஆறுதல் பரிசுகள்!
வினாக்கொத்துக்கு விடை தந்து பரிசுகளை
அள்ளிச் செல்லுங்கள்!!

## உலகக் கிண்ண கிரிக்கெட் - 2003

### வெல்லுங்கள்...! அள்ளுங்கள்...!

உலகக் கிண்ணக் கிரிக்கெட் பற்றிய வினாக்களுக்கு விடை தந்து பணப்பரிசுகளை, வெகுமதிகளை உங்களதாக்குங்கள்.

1. உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி 1975 இல் முதன் முதலாக எந்த நாட்டில் நடைபெற்றது? (.....................)
2. இரண்டு முறை தொடர்ச்சியாக உலகக் கிண்ணத்தை வென்று மூன்றாவது முறையாக வெல்லும் வாய்ப்பை இழந்த அணி எது? (.....................)
3. 2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகள் எந்தெந்த நாடுகளில் நடைபெறப்போகின்றன? (.....................)
4. 2003 உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆட்டத்தொடர் நாயக னாக (MAN OF THE SERIES) விளங்கப்போகும் வீரன் யார்? (.....................)
5. 2003 உலகக் கிண்ணத்தை வெற்றி கொள்ளப்போகும் அணி யாது? (.....................)

பூர்த்தி செய்துவிட்டீர்களா...? இது போன்ற ஐந்து கூப்பன்களை ஒரே வகையில் பூர்த்தி செய்து, எதிர்வரும் மார்ச் 06 ஆம் திகதிக்கு முன்பாக -

'உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003'
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்குத் தபாலிலோ, நேரிலோ அனுப்பி வையுங்கள்.

பெயர்: ------------------------------------------

வயது: ------------------------------------------

முகவரி: ------------------------------------------

------------------------------------------



*சரியான விடைகளை எழுதுபவர்களிலிருந்து அதிர்ஷ்ட சாலிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.*

*போட்டி முடிவுகள் மார்ச் 28 ஆம் திகதியன்று 'நமது ஈழநாடு' பத்திரிகையில் வெளியாகும்.*

# வார்த்தை விளையாட்டு - 20

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 சி | | 2 | | 3 வே | |
| | 4 க | | | | |
| | | | | 5 | |
| 6 | | 7 தி | | 8 | 9 |
| | 10 | | 11 | ல் | |
| 12 | | | பு | | |

முழுப் பெயர் : ..................................

கற்கும் பாடசாலை : ..................................

கற்கும் தரம் : ..................................

முகவரி : ..................................

.............................. ..............................

கையொப்பம் திகதி



*இடமிருந்து வலம்*

*1. உலக கிண்ண கிரிக்கெட் இங்கும் நடைபெறுகிறது.*
*4. கலவரம் அல்லது குழப்பம்*
*5. ஒரு மிருகம்*
*6. வாகனத்தை ஓட்டுபவர்*
*8. ஒரு கிரகம், கிழமை*
*10. கடிதம் இப்படியும் அழைக்கப்படும்*
*12. சிலப்பதிகாரத்தில் முக்கியமான ஒரு பொருள்.*

*மேலிருந்து கீழ்*

*1. கைதிகளை அடைக்கும் இடம்*
*2. ஆறுகளுக்குக் குறுக்காக – போக்குவரத்துக்காக அமைக்கப்படுவது*
*3. ஒரு மரம்*
*8. குறுணிக் கற்கள் இப்படிச் சொல்லப்படும்.*
*9. பழம் (தலைகீழாக)*
*11. ஆடு, மாடு போன்ற விலங்குகளின் உணவு. (தலைகீழாக)*

சிறுவர் அரங்கம் வார்த்தை விளையாட்டுப் போட்டியில் 15 வயதுக் குட்பட்ட எவரும் பங்குபற்றலாம்.

மேறகாணும் கூப்பனை நிரப்பி உங்கள் சுயவிபரங்களுடன் தபாலில,

**நமது ஈழநாடு**
**சிறுவர் அரங்கம்**
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் பதில்கள் எமக்கு வந்து சேர வேண்டிய
இறுதி நாள்:- 19-02-2003

சரியான விடை எழுதிய மூவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கப்படும்.

## வார்த்தை விளையாட்டு - 19

இல் சரியான விடை எழுதி, குலுக்கல் மூலம் பரிசு பெறத் தெரிவு செய்யப்பட்ட அதிர்ஷ்டசாலிகள்.

*1ஆம் பரிசு -*
சி.பிரசாந்த்
ஆனந்தன் வீதி,
மானிப்பாய்.

*2ஆம் பரிசு -*
R.கஸ்ரன்
975/17, வளன்புரம்.

*3ஆம் பரிசு -*
ச.பரதன்
இலகடி,
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

★ *பரிசுகள் தபால்மூலம் விரைவில் உங்களை வந்தடையும்.*



# சிறுவர் அரங்கம்

## காவற்காரன்

ஒரு காட்டிலே இருந்த முயல், மான், அணில், ஆடு எல்லாம் ஒன்று சேர்ந்து காய்கறித்தோட்டம் ஒன்றைச் செய்ய முடிவு செய்தன. அதன்படியே நிலத்தை உழுது பண்படுத்தி விதை போட்டன.

ஆளுக்கு ஒவ்வொரு வேலையைப் பகிர்ந்து கொண்டு தோட்ட வேலைகளில் துடிப்புடன் ஈடுபட்டன. அவர்களின் உழைப்பும் வீண்போக வில்லை.



அவர்களின் தோட்டத்தில் கரட், பீற்றூட், போஞ்சி, கோவா, கத்தரி என்ற காய்கறிகள் காய்த்துக் குலுங்கின. காய்கறிகள் நன்கு விளைந்ததும் அவற்றை மறுநாள் சந்தைக்குக் கொண்டு போய் விற்கத் தீர்மானித்தன.

அதுவரை ஒற்றுமையாக வேலை செய்த மிருகங்கள் மத்தியில் சந்தேகம் தோன்றியது. சந்தைக்குக் கொண்டு போய் காய்கறிகளை விற்பதற்கு முன்னால் - அதனைப் பாதுகாக்க யாரைக் காவலுக்கு வைப்பது என்று பிரச்சினை எழுந்தது.



தோட்டம் செய்த நான்கு மிருகங்களும் காய்கறிகளைச் சாப்பிடுபவர்களென்பதால், யாரைக் காவலுக்கு வைப்பது என்ற பிரச்சினை எழுந்தது.

அப்போது அந்த வழியாகப் போன குரங்கு ஒரு யோசனை சொன்னது. காய்கறிகளைச் சாப்பிடாத ஒரு மிருகத்தை அழைத்து வந்து காவலுக்கு வையுங்கள் என்பதே குரங்காரின் யோசனை.

அதன்படியே நான்கு விலங்குகளும் யோசனை செய்தன. சிங்கம், புலி என்பன இவர்களின் பேச்சைக் கேட்டு நடக்கக் கூடியவர்களா? அதனால் நரியாரைக் காவலுக்கு இருக்குமாறு கேட்பதென முடிவானது. நரியாரும் சம்மதம் சொன்னார்.

ஒருவாறு இரவு கடந்தது. நரியும் தனது வேலையை நன்கு செய்தது. ஆனால், காய்கறிகளைச் சந்தைக்குக் கொண்டு போக வேண்டிய முயல், மான், அணில், ஆடு எவருமே தோட்டத்துக்கு வரவில்லை.

என்ன நடந்தது? இரவோடு இரவாக நரி இந்த நான்கு விலங்குகளையும் கொன்று தின்று விட்டது. காய்கறிகளைத் தின்னாத நான்கு மிருகங்களும் பொருத்தமற்ற காவற்காரனை நியமித்ததால் ஆபத்துக்குள் மாட்டிக் கொண்டன.

## கணிதப் புதிர்

கடையொன்றில் ஆறு வெவ்வேறு அளவிலான எண்ணெய்ப் பீப்பாய்கள் இருந்தன. அவற்றில் 62, 40, 38, 36, 32, 30 லீற்றர் எண்ணெய் இருந்தது. எண்ணெய் வாங்கவந்த இரண்டு வியாபாரிகளில் ஒருவர் மூன்று பீப்பாய்களை வாங்கிச் சென்றார்.

இரண்டாவது வணிகர் இரண்டு பீப்பாய்களை வாங்கிச் செனறார். ஒரு பீப்பாய் மட்டும் - யாரும் வாங்காமல் எஞ்சியிருந்தது.

வியாபாரிகள் வாங்கிய எண்ணெயைக் கணக்கிட்டதில், இரண்டாவது வணிகர் வாங்கியதைப் போல இரண்டு மடங்கு எண்ணெய் முதலாவது வணிகரிடம் இருந்தது.

விற்பனையாகாமல் எஞ்சியிருந்தது எந்தப் பீப்பாய்? வணிகர்கள் வாங்கிய பீப்பாய்கள் எவை? எவை? எனக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்?



*விடைகள் மறுபக்கம்.*

## வார்த்தை விளையாட்டு - 19

**சரியான விடைகள்**

இடமிருந்து வலம்

1. கிரகம்
4. கவி
5. காவடி
6. அரம்
7. தசை
9. கடம்
10. விம்பம்

மேலிருந்து கீழ்

1. கிணறு
2. ரதம்
3. கடிகாரம்
4. கடிதம்
6. அடவி
8. ஆசை

## விடுகதை

1.தங்கை வரைந்த சித்திரம் தரையில் மிதக்குது. அது என்ன?
2.நாக்குண்டு பல் இல்லை, குரல் உண்டு பேச்சில்லை. அது என்ன?
3.காலில்லை ஓடுவான், வாய் இல்லை கத்துவான். அவன் யார்?
4.சொல்லாமல் வருவான்,அலைக் கழிக்காமல் போகமாட்டான். அவன் யார்?
5.முடித்திறக்கும் கதவுகள், சத்தம் செய்யாக் கதவுகள். அது என்ன?
6.மனிதன் வாயிலே மலரும் பூ என்ன பூ?
7.ஊசி மூக்கன் சந்தைக்கு போகின்றான். அவன் யார்?
8.வால் உள்ள குருவி, இரை எடுக்கும் சாப்பிடாது. அது என்ன?
9.வெள்ளை மனிதனுக்கு கறுத்தச் சட்டை. அது என்ன?
10.மண்ணுக்கு மாயாண்டி. உரிக்க உரிக்க தோழாண்டி. அவன் யார்?



விடைகள் மறுபக்கத்தில்

அ.றஜினி,
தரம் ~ 10,
யாழ். கன்னியர் மடம் மகாவித்தியாலயம்.

## உங்கள் கைவண்ணம்




## தெரிந்து கொள்ளுங்கள்

✦ பாம்பு தனது உணவை முகர்ந்து பார்க்க நாக்கைப் பயன்படுத்துகின்றது. அதனால்தான் அடிக்கடி நாக்கை வெளியில் நீட்டிக் கொள்கின்றது.

✦ உலகத்திலேயே மிகவும் வெப்பமான இடம் எதியோப்பியாவிலுள்ள டலோல் (Dallol).

✦ பட்டாசுகளைப் பச்சை நிறமாக ஒளிரச்செய்யும் இரசாயனப் பொருள் பேரியம் ஆகும்.

✦ சோயா பீன்ஸில் மட்டும்தான் அதிக சதவீதத்திலான புரதம் உள்ளது. இதில் 65 சதவீதம் புரதம் இருக்கின்றது.

✦ உப்பு நீரைக் குடிநீராக மாற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் இரசாயனப்பொருள் செரினியம் ஆகும்.

✦ உலகிலேயே மிக உயரமாக வளரும் புல் மூங்கில்.

✦ பழங்களை செயற்கை முறையில் பழுக்க வைக்கப் பயன்படுத்தப்படும் வாயு எத்திலீன் என அழைக்கப்படுகின்றது.

# இளந்தேனீக்கள் கழகம்
## அங்கத்தவர்கள்



முழுப்பெயர்:-
யோ.சுசீலன்
கற்கும் பாடசாலை :-
யா/ யாழ்ற்றன் கல்லூரி,
காரைநகர்.
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
கிரிக்கெட், கல்வித்துறை, பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல.



முழுப்பெயர்:-
நா.பிரியலக்ஷன்
கற்கும் பாடசாலை :-
யா/வேலணை மத்திய கல்லூரி.
கற்கும் தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டுத்துறை,
கல்வித்துறை.



முழுப்பெயர்:-
நா.கி.கிறிஷிக்கா
கற்கும் பாடசாலை :-
யா/ இளவாலை கன்னியர்மடம்.
கற்கும் தரம் :- 4
ஆர்வமுள்ள துறைகள் :-
நடனம், பாட்டு.



முழுப்பெயர்:-
ஸ்ரீ.குவாலயா
கற்கும் பாடசாலை :-
யா/ வேம்படி மகளிர் கல்லரி.
கற்கும் தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
சங்கீதம், புத்தகம் வாசித்தல், கட்டுரை எழுதுதல், போட்டிகளில் பங்குபற்றுதல்.

முழுப்பெயர்:-
இ.நிரோசனா
கற்கும் பாடசாலை :-
யா/இராமநாதன் கல்லூரி
கற்கும் தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
கணிதம், வானொலிகேட்டல், பத்திரிகை வாசித்தல்.

முழுப்பெயர்:-
சி.நிரோஜன்
கற்கும் பாடசாலை :-
யா/இணுவில் மத்திய கல்லூரி
கற்கும் தரம் :- 5
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டு, முத்திரை சேகரித்தல்.

முழுப்பெயர்:-
ம.ராஜா
கற்கும் பாடசாலை :-
யா/நெடுந்தீவு மகா வித்தியாலயம்
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
ரீ.வி.பார்த்தல், விளையாட்டு, சித்திரம்.

முழுப்பெயர்:-
செ.கபிலன்
கற்கும் பாடசாலை :-
யா/அச்சுவேலி மத்திய கல்லூரி
கற்கும் தரம் :- 11
ஆர்வமுள்ள துறைகள் :-
வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல்.

# வில்லுப்பாட்டுப் பிறந்த கதை

வில்லிசைக் கலையின் முக்கிய இசைக் கருவி வில். இது, ஸ்ரீராமனுடன் தொடர்பு உடையது. உடுக்கை, இது சிவன் தொடர்புடையது. ஓசை ஒலியெலாம் ஆன இறைவனைப் பற்றி, இதிகாச புராணக் கதைகளைப் பற்றிக்கூறும் வில்லும் பாட்டின் தோற்றத்துக்கும் ஒரு கதை இருக்க வேண்டுமே.

சில நூற்றாண்டுகளுக்கு முன்பு தென்பாண்டி நாட்டிலுள்ள நெல்லைச் சீமையில் தெய்வ பக்தி மிகுந்த குறுநில மன்னன் ஒருவன் இருந்தான். அவன் தன் பகுதியை ஒரு குட்டிக் கோசலம்போல் அறநெறி தவறாமல் சிறப்பாக ஆட்சி செய்து வந்தான்.

ஒரு சமயம் மன்னன் வேட்டைக்குச் சென்றான். அதிகாலை முதல் அந்தி சாய்வதற்குள் அவன் தன் வில்லாற்றலால் பல மிருகங்களை வேட்டை ஆடிக் கொன்றான்.

உடல் களைத்த நிலையில் அவன் ஓய்வு எடுக்க நினைத்து ஒரு மரத்தடியில் அமைச்சர், படைத்தலைவர், வீரர்கள் புடை சூழ அமர்ந்தான். அப்போது அவனுக்கு கலைமகள் அருள் புரிந்தாள். அதன் காரணமாக அவன் மனதில் கருணை சுரந்தது. அழுதான் இறைவனை எண்ணித் தொழுதான். மன்னன் அழுவதைக் கண்டு அமைச்சர் - அரசனுக்கு என்னவோ ஏதோ என்று பயந்து விட்டாார். எனவே அவர் அரசே என்ன நடந்தது? ஏன் இப்படி என்று கேட்டுப் பணிந்தார்.

அமைச்சரே இறைவன் என்னுள் இப்போது ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறான். என் உள்ளத்தில் ஒரு கேள்வி எழுந்து என்னை வாட்டுகிறது. இதுவரையில் உற்சாகமாக உயிர்களை வேட்டையாடிய என் மனம் இப்போது உள்ளூர அழுகிறது. ஒரு ஈ, எறும்பைக் கூட படைக்க முடியாத எனக்குப் பிற உயிர்களைக் கொல்லும் உரிமை ஏது? பல உயிர்களை கொன்ற எனக்குப் பாவ மன்னிப்பு உண்டா? என்று மன்னன் கலங்கிய குரலில் கேட்டான்.



"உண்டு, அரசே உண்டு, பக்தி உடன் இறைவனின் புகழைப் பாடினால் தீராத பாவமும் தீர்ந்துவிடும். நிச்சயம் கதி மோட்சமும் உண்டு என்று பெரியோர்கள் கூறி இருக்கிறார்கள். எனவே, நீங்கள் இறைவனின் புகழைப் பாடுங்கள்" என்று அமைச்சர் அரசனுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறினார்.

"அப்படியா, நான் பாடவா? அதுவும் இங்கேயா? காட்டிலே கச்சேரியா?" என்று மன்னன் வினாவினான். "அரசே தாங்கள் கலைஞானம் மிக்கவர். தாங்கள் காட்டிலும் பாடலாம். எங்கேயும் பாடலாம். அதனால் நன்மைதான் விளையும்" என்றார் அமைச்சர்.

"சரி அமைச்சரே! பக்க வாத்தியக் கருவிகள்? இதுவரையில் வேட்டையாடி தாங்கள் தோளில் வைத்திருக்கும் வில்லை எடுங்கள். அமர்ந்து அந்த வில்லை காலில் கட்டிக் கொண்டு அம்பறா தூணியில் இருந்து அம்பை எடுத்து அதையே கையில் வீசு கோலாக்கி அப்படியும் இப்படியும் சுருதி லயத்தோடு வீசி வீசித் தட்டிப் பாடுங்கள் மன்னா" என்று அமைச்சர் யோசனை கூறினார்.

"சரி நீங்களே பாடுவதற்கு முதலில் அடி எடுத்துக் கொடுங்கள்" என்று மன்னன் கேட்டான். தன்னை கலைஞர்கள் கலைக்குத் தரவேண்டும். ஆகவே, தன்னைத் தந்தோம் என்பதை தந்தனத்தோம் என்று பாடி பாடலைத் தொடங்குங்கள் என்றார் அமைச்சர். அதன்படியே மன்னன் பாட ஆரம்பித்தான்.

மன்னன் பாடப் பாட அங்கிருந்த மற்றவர்களும் அவனுடன் சேர்ந்து உற்சாகத்துடன் "ஆமாம், ஆமாம்" என்று ஆமாம் போட்டுப் பாடினார்கள். அவ்விதம் அப்போது மாமன்னன் மடியில் பிறந்தது தான் வில்லுப்பாட்டுக்கலை.

மன்னனின் வில்லுப் பாட்டைக் கேட்பதற்கு அவனது வில்லுக்கு பயந்தோடிய விலங்குகள் யாவும் அங்கு வந்து கூடினவாம். அவை அவனது வில்லிசையை கேட்டு ரசித்தனவாம்.

அன்புக்கும் கலைக்கும்தான் என்ன சக்தி! என்னைக் கண்டு பயந்து ஓடிய மிருகங்கள் இப்போது நான் இருக்கும் இடத்திற்குத் தாமாகவே வந்து என் பாடலைக் கேட்டு ரசித்துக் கொண்டு இருக்கின்றனவே! என்று மன்னன் பூரித்துப் போனான்.

மறுநாள் காலையில் அவன் நாடு திரும்பியதும் தனது கொலு மண்டபத்துக்கு அறிஞர்களை அழைத்து தமது காட்டில் ஒரு புதிய கலை பூத்தது. அதை இப்போது நம் நாட்டுக்குக் கொண்டு வந்திருக்கிறேன். இந்த வில் இனிக் கொலைக் கருவி அல்ல. கலைக் கருவி. அந்த வில் இனி வேட்டை ஆடும் ஆயுதம் அல்ல, பாட்டுப் பாடும் வாத்தியம். இந்தக் கலைக்கு இலக்கணம் வகுத்து இதை நாடு முழுவதும் பரப்புங்கள் என்றான்.

அன்றைய தினம் அந்த மன்னனால் வில்லுப்பாட்டு என்ற இந்த முத்தமிழ்க் கலை இறைவனுக்குக் காணிக்கை ஆக்கபபடடது.

# இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இளந்தேனீக்கள் கழகம்**
**சிறுவர் அரங்கம்**
**நமது ஈழநாடு**
**267,நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## கணிதப் புதிருக்கான விடைகள்

முதலாம் வணிகன் வாங்கிய பீப்பாய்கள் 62, 38, 32 லீற்றர் கொள்ளளவுடையவை. இதன் மூலம் அவரிடம் 132 லீற்றர் எண்ணெய் இருந்தது.

இரண்டாம் வணிகன் வாங்கிய இரண்டு பீப்பாய்கள் 36, 30 லீற்றர் கனவளவுடையவை. இவற்றில் மொத்தம் 66 லீற்றர் எண்ணெய் இருந்தது.

40 லீற்றர் பீப்பாய் மட்டும் விற்பனையாகாமல் இருந்தது.

## விடுகதைக்கான விடைகள்

1. கோலம்
2. மணி
3. வாகனம்
4. நோய்
5. கண் இமை
6. சிரிப்பு
7. இறால்
8. அகப்பை
9. உழுந்து
10. வெங்காயம்



## இளந்தேனீக்கள் கழகம்
### விண்ணப்பம்

முழுப் பெயர் :....................................
கற்கும் பாடசாலை :....................................
கற்கும் தரம் :....................................
வீட்டு முகவரி :....................................
பிறந்த திகதி :....................................
ஆர்வமுள்ள துறைகள் :....................................
:....................................

................ ..............................
திகதி ஒப்பம்

.............................. ..............................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

# பிறேசில்

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் ஆர்வமாக இருக்கும் உங்களுக்கு - இந்த வாரம் உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் தற்போதைய சம்பியனான பிறேசில் நாட்டை அறிமுகம் செய்கிறோம்.



*தலைநகர்* - பிறேசிலியா
*பரப்பளவு* - 85 லட்சத்து 11ஆயிரத்து 965 ச.கி.மீ.
*மொழிகள* - போர்த்துக்கீஸ், ஆங்கிலம், ஜேர்மன், இத்தாலியன்.
*எழுத்தறிவு* - 81%
*சமயம்* - கிறிஸ்தவம்
*நாணயம* - குரு செப்ரோ

*அமைவிடம்* - தென்னமெரிக்காவில் மத்திய மற்றும் கிழக்குப் பகுதிகளில் பிறேசில் அமைந்துள்ளது. இதன் தென்மேற்கே உருகுவே, ஆஜென்ரீனா, பிரகுவே ஆகிய நாடுகளும், மேற்கே பொலிவியா, பெரு ஆகியனவும் - வடக்கே வெனித்வேலா, கொலம்பியா, கயானா, கரினாம் மற்றும் பிரெஞ் கயானா போன்ற நாடுகளையும் எல்லைகளாகக் கொண்டது. உலகில் ஐந்தாவது பெரிய நாடு பிறேசில்தான்.

*பொருளாதாரம்* - கப்பல் மற்றும் கார் தயாரிப்பு, துணிகள், உணவுப் பொருட்கள் போன்றன முக்கிய உற்பத்திப் பொருட்கள். இங்கு அதிகளவாக கனிப்பொருட்கள் உள்ளன. இரும்பு, பொஸ்பேற், நிலக்கரி, தங்கம் என்பன இவற்றுள் முக்கியமானவை.

விவசாய உற்பத்தியிலும் பிறேசில் சளைத்ததல்ல. சோயா பீன்ஸ், கோப்பி, கரும்பு, சோளம் போன்றன அதிகளவில் இங்கு விளைவிக்கப்படுகின்றன. எண்ணெய் உற்பத்தியும் இடம்பெறுகின்றது.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*அளவளாவு இல்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடுஇன்றி நீர்நிறைந்து அற்று.*

*- திருக்குறள்.*

# நமது நோக்கு

## மனக்கசப்புடன் மக்கள்

பொதுமக்களதும், அமைப்புக்களதும் வலுத்துவந்த எதிர்ப்புக்களின் மத்தியில் - புனரமைப்புப் பணிகள் பூர்த்தியுற முன்னரே திறக்கப்படுவதாக இருந்த யாழ். நூலகம் - நேற்றுமுன்தினம் மாலை யாழ்.மாநகரசபை மேற்கொண்ட தீர்மானத்துக்கமைய இரத்துச் செய்யப்பட்டுவிட்டது.

நூலகப் பணிகள் முழுமையடைய முன்பாகவே, தமது பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் - யாழ்.நூலகத்தைத் திறப்பதன் மூலம் தமிழ் மக்களின் ஏகோபித்த எதிர்ப்பையும், பெரும் வரலாற்றுத் தவறொன்றையும் நிகழ்த்தவிருந்த சம்பவம் - இரத்தாகிப்போனது தமிழ் மக்களைப் பொறுத்தளவில் மகிழ்ச்சிக்குரியதாகும்.

இந்தத் திறப்பு விழா ஏற்படுத்தவிருந்த பதற்றமும், அமைதியற்ற சூழலும் தணிந்ததும் மக்களுக்கு மன நிம்மதியைத் தருவதாக அமைந்துள்ளது.

அதேவேளை - நூலகத் திறப்பு விழாவை அவசர கோலத்தில் முன்னெடுப்பதானது பொருத்தமானதல்ல எனவும், அழிந்து சிதைந்த நூலகக் கட்டடம் ஒரு வரலாற்று ஆவணமாக, காலத்தின் சாட்சியமாகத் திகழ வேண்டியிருந்ததை மாற்றி, அதற்கு மேற்பூச்சும் திருத்தமும் செய்ததன் மூலம் - தமிழினத்தின் வரலாற்றில் நிகழ்ந்த என்றுமே மறந்துபோகாத, மறக்கப்பட முடியாத - பௌத்த சிங்களப் பேரினவாதம் எமது இனத்தின் இதயத்தினையே சுட்டெரித்த நிகழ்வைத் திரைபோட்டு மறைத்திட முனைந்த செயலுக்கு எதிர்ப்பும் தெரிவித்த குரல்களுக்கு - தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும், நூலகத்தைத் திறந்துவைக்க இருந்தவருமான ஆனந்தசங்கரி தந்திருக்கும் பதிலானது - தமிழ் மக்கள் மத்தியில் மனக்கசப்பை ஏற்படுத்துவதாக அமைந்திருக்கிறது.

தமிழ் மண்ணில் தலைநிமிர்ந்து நின்ற ஒரு நூல்நிலையம் - மீண்டும், இன்றைய நவீன உலகின் வசதி வாய்ப்புக்களுடன் உருவாக்கப்பட வேண்டும் என்றும்,

எமது கடந்தகால வரலாற்றை மறந்துவிடும் சுய நலமிகளாக இல்லாது - கருக்கப்பட்ட எமது வரலாற்றுப் பக்கங்களின் மீதிருந்து கொண்டே - அதன் பாதிப்பின் தீவிரத்தை மனதிற் பதிய வைத்துக் கொண்டே - விடுதலைப் போராட்டத்தின் பெறுமதியை நினைவில் நிறுத்திக் கொண்டே - வருங்காலப் பாதையில் நடைபோட வேண்டும் என்ற உறுதியுடன் நின்ற மக்களுக்கு - ஆனந்த சங்கரி அளித்திருக்கும் பதிலும், அவரது கருத்துக்களும் - அவரைத் தமிழினத்திலிருந்து பிரிந்து வாழும் ஒரு மூன்றாவது மனிதனாகவே எண்ண வைத்திருக்கின்றன.

கடந்த காலங்களில் தமிழினத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இராணுவத் தாக்குதல்களும், ஒடுக்குமுறைகளும் - தமிழ் மக்களைப் பாதித்ததும் -

அப்பாதிப்புக்குள்ளாகியும் தளர்வடையாது - ஒருபுறம் விடுதலைப் போராட்டத்துக்கு உரம் சேர்த்துக் கொண்டே, மறுபுறம் வீழ்ந்தாலும் எழுந்தே தீருவோம் என்ற விடா முயற்சியுடன் போராடிய மக்கள் பற்றிய - ஆனந்தசங்கரியின் 'கவலை' -

பட்ட துன்பங்கள் எதுவாயினும், இனத்தின் நல்வாழ்வுக்காக மக்கள் எதிர்பார்த்திருக்கும் 'விடிவையும வளர்ச்சியையும்' கேள்விக்குட்படுத்துவதாகவும், அவ்வாறானதொரு முன்னேற்றம் தேவைதானா? அதற்கு நீங்கள் தகுதியுடையவர்கள்தானா? என்ற ஏளனம் செய்யும் மனப்பாங்குடனும் முடிவடைந்திருக்கிறது.

'வன்னிப் பிரதேசத்தில் இப்போதும் மரநிழல்களிலும், தரையிலும் இருந்து கல்வி கற்கின்ற மாணவச் செல்வங்களின் அவலங்களை நேரில் கண்டுவந்த வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தினர், இன்று ஓர் அடுக்கு மாடிக்கு 'லிப்ட்' வசதியும் குளிரூட்டி வசதியும் சிற்றுண்டிச்சாலை வசதியும் இல்லாமல் நூல் நிலையத்தைத் திறப்பதா என்று கேட்பது சரிதானா? இதற்கு ஒரு போராட்டம் அவசியம் தானா?' என ஆனந்தசங்கரி கேள்வியெழுப்பியிருக்கிறார்.

ஊரூராய் இடம்பெயர்ந்து, உற்றார், உறவுகளிழந்து, இழப்பதற்கு ஏதுமற்றதாய் நின்றபோதும் - தளராமல் நின்ற மண்ணின் மாண்பினைத் தெரியாதவர், இவ்வாறு கேள்வியெழுப்புவதைப் பற்றிக் கவலைப்பட என்ன இருக்கிறது என ஒருபுறம் புறந்தள்ளிவிட நினைத்தாலும் -

பேரினவாதத்தால் சிதைக்கப்பட்ட யாழ்.நூலகத்தை மீண்டும் முழுமையான, உலகமே போற்றும் ஒரு நூலகமாக, அறிவுக்களஞ்சியமாக அனைத்து வசதிகளுடனும் கட்டியெழுப்ப வேண்டுமென்று காத்திருக்கும் மக்களின் மனம்நிறைந்த எதிர்பார்ப்பைக் கேள்விக்குள்ளாக்கும் தார்மீக உரிமை இவருக்கு எங்கிருந்து வந்தது என்றே மக்கள் நியாயமுடன் கோபம் கொள்கின்றனர்.

குண்டுகள் வீழவும், எறிகணைகள் பறக்கவும், உடைமைகள் சிதையவும் இந்த மண் அவலப்பட்டபோது - இந்த மக்கள் ஊரூராய் ஓடியபோது - கொழும்பிலும் இந்தியாவிலும் 'அரசியல்' நடத்தியவர்களுக்கு,

இன்றும் - முன்னருக்குக் குறைவில்லாது யாழ்ப்பாணத்துக்கு 'விஜயம்' மட்டுமே செய்து வருபவர்களுக்கு -

யாழ்.நூலகத்தின் திறப்பு விழாக் கதாநாயகனாகக் கிடைத்த வாய்ப்பு பறிபோனதன் ஆதங்கம் - எப்படியெல்லாம் பேச வைக்கிறது என்பதைப் பார்க்கும் வாய்ப்பு யாழ். மக்களுக்குக் கிடைத்திருக்கிறது.

அதுமட்டுமல்ல எல்லாவற்றையுமே அரசியல் ஆதாயத்தோடு நோக்குபவர்களுக்கு - மக்களின் எண்ணங்களும், உணர்வுகளும் புரியாமல் இருப்பதையும் ஆனந்தசங்கரி - தனது அறிக்கையில் தெளிவாக்கிச் சென்றிருக்கிறார்.

# ஊடகவியலாளர் மீதான தாக்குதல்களுக்கு படையினர் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்!

## தென்கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் அறிக்கை

மானிப்பாய் பகுதியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற சம்பவங்களின்போது செய்தி சேகரிப்பிலும், புகைப்படப் பிடிப்பிலும் ஈடுபட்டுக்கொண்டிருந்த இரு தமிழ் ஊடகவியலாளர்கள் படையினரால் தாக்கப்பட்டமைக்குத் தென்கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கம் வன்மையான கண்டனம் தெரிவித்துள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யப்பட வேண்டுமென ஜனாதிபதி, பிரதமர், ஊடகத்துறை அமைச்சர் ஆகியோரையும் அவசரமாக மகஜர் மூலம் அச்சங்கம் கோரியுள்ளது.

ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பாகத் தென்கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கம் விடுததுள்ள கண்டன அறிக்கையில் மேலும் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுளளது.

"ஊடகத்துறை சுதந்திரம் முழுமையாக வழங்கப்பட்டுள்ளதாக அரசு தம்பட்டமடித்துக் கொண்டிருந்தாலும, தமிழ் ஊடகவியலாளர்கள் மீதான இத்தகைய மிலேச்சத்தனமான தாககுதல்களும், அடக்குமுறைச் செயற்பாடுகளும் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன.

கடந்த 12 ஆம் திகதி புதன்கிழமை மானிப்பாய் சந்திப் பகுதியில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக ஸ்தலத்திற்குச் சென்று செய்தி சேகரித்துக்கொண்டும், புகைப்படம் பிடித்துக் கொண்டிடுமிருந்த "யாழ்.தினக்குரல்" பத்திரிகையின் செய்தியாளரும், படப்பிடிப்பாளருமான எஸ்.சிவபாலன், "நமது ஈழநாடு" பத்திரிகையின் வலிகாமம் கிழக்கு செய்தியாளர் மனோகரரா ஜா ஆகியோர் கலகம் அடக்கும் படையினரால் கடுமையாகத் தாக்கப பட்டுள்ளனர். அவர்களிடமிருந்த பெறுமதி வாய்ந்த கமராவும் சேதமாக்கப்பட்டுள்ளன.

தம்மை ஊடகவியளாளர்களென உரிய அடையாள அட்டைகளைக் காட்டி, தெளிவாக அடையாளம் காட்டிய நிலையிலும், படையினர் இந்த ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்தியிருப்பது பெரும் விசனத்திற்குரியதும், வன்மையான கண்டத்திற்குமுரியதுமாகும்.

நாட்டின் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலகட்டத்தில் தமிழ் ஊடகவியலாளர்கள் பல நெருக்கடிகளையும், அடக்குமுறைகளையும், ஏன் உயிராபத்துக்களையுமே சந்தித்து வந்தனர்.

இன்று நாட்டின் சமாதானச் சூழ்நிலை தோற்றுவிக்கப்பட்டு ஒருவருட பூர்த்தியை கொண்டாட முனைந்துள்ள வேளையிலும், தமிழ் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் சம்பவங்கள் ஓய்ந்துவிடவில்லை. இவை தொடர்கதையாகவே உள்ளதென்பதை மானிப்பாயில் நிகழ்ந்துள்ள தமிழ் ஊடகவியலாளர்கள் மீதான படையினரின் தாக்குதல் சம்பவம் நிரூபித்துள்ளது.



நமது ஈழநாடு செய்தியாளர்
மனோகரராஜா

இத்தகைய மிலேச்சத்தனமான சம்பவங்கள் ஊடகவியலாளர்கள் தொடர்பில் இனிமேலும் நடைபெறா வண்ணம் அரசும், ஊடகத்துறை மற்றும் பாதுகாப்பு அமைச்சுக்களும் உருப்படியான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

மானிப்பாயில் இரு தமிழ் ஊடகவியலாளர்கள் படையினரால் தாக்கப்பட்டுள்ள சம்பவம் தொடர் பில் தக்கநடவடிக்கை எடுக்கப்பட்டு, இனிமேலும் இத்தகைய ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் சம்பவங்களில் படையினர் ஈடுபடுவதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டும்" - இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்படடுள்ளது.

# இந்திய சமஷ்டி முறையை ஆராய்வதே சிறந்ததாம்

## எதிர்க்கட்சித் தலைவர் சொல்கிறார்

ஐரோப்பிய நாடுகளில் நடைமுறையில் உள்ள சமஷ்டி முறைபற்றி அறிந்து கொள்வதைவிட, அயல்நாடான இந்தியாவின சமஷ்டிமுறை குறித்து அறிந்து கொள்வது சாலச்சிறந்தது.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - இந்த விடயம் தொடர்பாக இந்தியாவைப் புறக்கணித்துவிட்டு ஐரோப்பிய நாடுகளில் அரசாங்கம் கவனம் செலுத்துவது எந்தவகையிலும் ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# சிக்கலான கட்டத்தில் இருக்கும் பேச்சுக்கள்; இருதரப்பு புரிந்துணர்வு பாராட்டத்தக்கது

## பிரித்தானிய வெளியுறவுச் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் சிக்கல் நிறைந்த - ஆழமான கட்டத்தில் உள்ளபோதும், இரண்டு தரப்புக்களும் புரிந்துணர்வுடன் செயற்படுவது பாராட்டத்தக்கது எனப் பிரித்தானிய வெளியுறவுச் செயலாளர் மைக் ஓ ப்றெய்ன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இலங்கை வந்து, நிலைமையை அவதானித்த இவர் - லண்டனில் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு குறிப்பிட்டார்.

பேர்ளினில் நடந்துமுடிந்த ஐந்தாவது சுற்றுப் பேச்சுக்களின்போது, மனித உரிமைகள் விவகாரம் குறித்துப் பேசப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க விடயமாகும்.

அரசும்-புலிகளும் செய்துகொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கை வெற்றிகரமாக நடைமுறையில் இருப்பது சமாதான முயற்சிகளில் ஒரு மைல்கல் எனக் குறிப்பிட்ட மைக் ஓ பறெய்ன், இரு தரப்புக்களும் அரசியல் விடயங்கள் குறித்து விரைவாகத் தீர்வுகாண முயற்சிக்கவேண்டும் என்றும், அதுவே சமாதான முயற்சிகளை வலுடையச்செய்யும் என்றும் தெரிவித்துள்ளார்.

## மிருசுவில் படுகொலைகள்

# விசாரணையில் 5 படையினரும் அடையாளம் காட்டப்பட்டனர்!

மிருசுவில் படுகொலைகள் தொடாபாக மேல் நீதிமன்றத்தில் இட பெறறுவரும் ட்ரயல் அட்பார் விசாரணைகளின்போது, படுகொலைகளுடன் தொடர்புடைய ஐந்து இராணுவத்தினரும் அடையாளம் காட்டப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விசாரணைகளின்போது - சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியான பொன்னுத்துரை மகேஸ்வரன், கொலைகளில் ஈடுபட்ட ஐந்து இராணுவத்தினரையும் அடையாளம் காட்டினார்.

படையினரிடம் இருந்து தான் தப்பித்து வந்த விபரத்தையும் இவர் நீதிபதிகளிடம் எடுத்து விளக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இளங் கலைஞர் மன்ற இசைவிழா இரண்டாம் நாள்

இளங் கலைஞர் மன்ற வருடாந்த இசைவிழா நேற்று முதல் இடம்பெற்றுவருகின்றது. 23 ஆம் திகதிவரை தொடர்ந்து 10 நாட்கள் இவ்விசை விழா நடைபெறவுள்ளது.

இசை விழாவின் இரண்டாம் நாளான இன்று பி.ப. 4 மணிக்கு இரத்தினகுமார் - வாகீஸ்வரன் குழுவினரின் மங்கள இசையுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

மாலை 5 மணிக்குச் சாந்தகுமாரி விஜயகுமார் சர்மாவின் பாட்டும், மாலை 5.30 மணிக்கு மன்ற மாணவர்களின் குழுப் பாடல் நிகழ்வும், மாலை 5.45 மணிக்கு சுதா மகாதேவனின் வீணை இசையும், மாலை 6.10 மணிக்கு ஏ.கே.கருணாகரனின் இசைக்கச்சேரியும், இரவு 7.10 மணிக்கு, உடுவில் பரதகலா நிவேதன் நாட்டியாலய மாணவர்களின் நாட்டியாஞ்சலியும் இடம்பெறவுள்ளது.

# புனர்வாழ்வு, புனரமைப்பு உபகுழுவின் கூட்டம் இரு வாரங்களுக்கு ஒத்திவைப்பு

திருகோணமலையில் நடைபெறத திட்டமிட்டிருந்த புனர்வாழ்வு, புனரமைப்பு மனிதாபிமான உபகுழுவின் கூட்டம் இரண்டு வாரங்களுக்குப் பிற்போடப்பட்டிருப்பதாக அரசாங்கததின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் பேணாட் குணதிலக தெரிவிததார். இந்தக் கூட்டம் எதிர்வரும் 25 ஆம், 26 ஆம் திகதிகளில் நடைபெறலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். வட-கிழக்குப் புனர்வாழ்வு, புனரமைப்புத் தொடர்பான உபகுழுவின் கூட்டத்தில் ஜப்பானிய விசேட தூதுவர் யசுஷி அகாஷி கலந்துகொளளத் திட்டமிடப்பட்டிருந்தது. அதன்படி அகாஷி கொழும்பு வந்துள்ளபோதும், ஏற்பாடுகள் தாமதமடைந்ததால் கூட்டத்தினைப் பிற்போடவேண்டியேறபட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# தும்பளைக் கடலில் மூழ்கிய இளைஞன் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

தும்பளைப் பகுதியிலுள்ள கடற்பரப்பில் குளிக்கச்சென்ற இளைஞன் அங்கிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தும்பளை கிழக்கைச் சேர்ந்த சபாரட்ணம் நிவாஸ் (வயது 20) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

கடந்த 12 ஆம் திகதி கடலில் குளிக்கச்சென்ற இவர் வடு திரும்பாததை அடுத்து தேடியபோதே இவரது சடலம் கரையொதுங்கியமை கண்டுபிடிக்கப்பட்டது.

இறந்தவரின் சடலம் மந்திகை மருத்துவமனைக்குப் பொலிஸாரினால் எடுத்து வரப்பட்டு, விசாரணையின் பின் நேற்றுமுன்தினம் மாலை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

## மானிப்பாய் தாக்குதலுக்கு எதிரான கண்டனப் பேரணியிலிருந்து....











# அமெரிக்க - ஐரோப்பிய முறுகல்; ஈராக் பிரச்சினையில் எதிரொலிப்பு!

அமெரிக்க - ஈராக் போர் பற்றிய அரசியல், புதிய அத்தியாயங்களை வரையத் தொடங்கிவிட்டது. அதன் மிகப்பிந்திய செய்தியை, இரண்டாம் உலகப் போரின் கதாநாயகர்களாக விளங்கிய இரு தலைவர்களை நினைவுபடுத்தும் நூல் ஒன்றின்மூலம் கடந்த வாரததின் நடுப் பகுதியில் பிரித்தானியப் புத்திஜீவி ஒருவர் வெளியிட்டிருந்தார். அதன் தலைப்பு **"Hitler and churchill, Secres of Leadership"** என்பதாகும். அதனை **Andrew Roberts"** என்பவர் எழுதியிருந்தார். பிரித்தானியர் ஏன் அப்படிச் சிந்தித்தார் என்பதே தற்போதைய சர்ச்சையாகும். தற்போது அந்நூல் பிரித்தானியாவில் பரபரப்பாக விற்பனையாவதுடன், பேசப்படும் நூலாகவும் விளங்குகின்றது. இவ்வாரம் புதிதாக உருவெடுத்து வரும் மாறும் அரசியல் சூழலை நோக்குவோம்.

கடந்த வருடம் ஏப்ரல் மாதமளவில் அமெரிக்க ஆளும் வர்க்கத்தின் ஆலோசகரும், அமெரிக்க நலன் விரும்பியுமான பேராசிரியர் ஜோசப் றை, அமெரிக்காவைப் பற்றிக் குறிப்பிட்டதை நினைவு கூருவது பொருததப்பாடாக அமையும். உலகில் ஏற்பட்ட புதிய உலக ஒழுங்கின் பின்பான அரசியல் மாற்றத்தில், குறிப்பாக செப்ரெம்பர் தாக்குதலுக்குப் பின்பான உலகில், மூன்று அதிகார வடிவங்களை அவர் குறிப்பிட்டிருந்தார். ஒன்று -அதிசிறந்த இராணுவப் பலத்தைக் கொண்ட தனிவல்லரசாக (Unipolar) அமெரிக்கா என்ற அரசையும், இரண்டாவது - பொருளாதாரப் பலத்தின் அடிப்படையில் பலமுனை அதிகார (Multipolar) வடிவமாக அமெரிக்கா, ஐரோப்பா, ஜப்பான் என்பனவற்றையும் இனங்காணுகின்றார். மூன்றாவதாக - எல்லைகளைத் தமது அதிகாரத்திற்குள் கொண்டிருக்கும் கட்டமைப்புடைய அதிகார (Structure of power) அரசுகளை இனங்கண்டுள்ளார். ஆனால், அவை எந்த அரசுகளெனச் சுட்டிக்காட்டாது தவிர்த்திருந்தார். மொத்தத்தில் அமெரிக்கா, இராணுவ ரீதியில் ஒரு வல்லரசு என்ற முடிவாகவே அவர் வரைந்த **"The American National Interest and Global Public Goods"** என்ற கட்டுரை அமைந்திருந்தது. அவ்வாறான இராணுவ வல்லரசு ஈராக் விவகாரத்தில் எடுத்துக் கொண்ட கொள்கையினால் பல நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளது.

அமெரிக்காவில் மிக நீண்ட காலம் வெளிவிவகார ஆலோசகராகக் கடமைபுரிந்த ஹென்றி கீசிங்கர் பல தடவை அமெரிக்க ஆளும் தலைமைகள் பலவற்றுக்குப் பின்வருமாறு ஆலோசனை கூறி வந்துள்ளார்.

"ஐரோப்பா இல்லாத அமெரிக்காவும் அமெரிக்கா இல்லாத ஐரோப்பாவும் பாரிய நெருக்கடிகளை உலகதின் முன் சந்திக்கவேண்டிய நிலைக்கு உள்ளாகும். இதில் ஐரோப்பாவை விட அதிக பாதிப்பினையும், நெருக்கடியையும் சந்திக்கும் அரசாக அமெரிக்காவே விளங்கும்!"

இத்தகைய ஆலோசகரையும், அவரது ஆலோசனையும் நிராகரிக்கும் வில்லியம் புஷ்- கீசிங்கருக்கும் அவரது ஆலோசனைகளுக்கும் செவிசாய்க்க மறுக்கும் அதே நேரம், கீசிங்கரை எதிரியாக நினைக்கும் றையஸை ஆலோசகராக அமர்த்தியிருப்பதும் ஆபத்தான அரசியலாக அமெரிக்கப் புத்திஜீவிகளாலும், சில உயர்வர்க்கப் பிரஜைகளாலும் எண்ணப்படுகிறது.

உண்மையில் ஈராக் விடயத்தில் கொலின் பவல் - ஐ.நா. பாதுகாப்பு சபையில் முன்வைத்த சற்ரலைட் படங்களையும், ஒட்டுக் கேட்ட தகவல்களையும் பிரானஸ், ரஷ்ய, ஜேர்மனி (தற்காலிகப் பாதுகாப்புச் சபையின் உறுப்பினர்), சீனா போன்ற நாடுகளின் அரசியல் தலைமைகள் ஏற்றுககொள்ளாது தவிர்த்ததுடன், புதிய பல நிபந்தனைகளை அமெரிக்காவுக்கு விதிக்க முனைந்துள்ளன. குறிப்பாக மிக அணமையில் ஜேர்மனியல் சந்தித்த ரஷ்ய, பிரான்ஸ், ஜேர்மனி நாட்டு அரசியல் தலைமைகள் பின்வரும் நிபநதனைகளைச் சர்வதேச சமூகத்திற்கு முன்வைத்துள்ளனர்.

1. ஈராக்கில் பரிசோதனையில் ஈடுபட்டுள்ள உறுப்பினர்களுடன் மேலதிகமாகப் பிரான்ஸ், ஜேர்மனி நாட்டவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்.

2. ஆயுதப்பரிசோதனைக்கான காலக்கெடுவை நீடிக்க வேண்டும்.

3. அமெரிக்கத் துருப்புக்கள் வளைகுடாப் பகுதியிலிருந்து வாபஸ் பெறப்பட்டு, ஐ.நாவின் இராணுவம் ஒன்று ஈராக் பிரதேசத்தில் அனுப்பப்படுவதுடன, கண்காணிப்பு நடவடிக்கையில் அது ஈடுபடுதல் வேண்டும்.

4. ஈராக் மீதான போர் நடவடிக்கையில் துருக்கியை அமெரிக்கா பயன்படுத்தமுடியாது என்பதுடன், ஏற்கனவே, அப்பகுதியில் நிறுத்தப்பட்ட அனைத்து இராணுவக் கடற்படைத் தளபாடங்களும் வாபஸ் பெறப்படுதல் வேண்டும்.

5. ஈராக் மீதான போரில் நேட்டோ ஈடுபட முடியாதெனவும், அவ்வாறு செயறபடும் நாடுகளில் பிரான்ஸ, ஜேர்மனி, பெல்ஜியம் என்பன இணைந்துள்ளதென்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பிரான்ஸின் ஜனாதிபதி ஷிராக் ஆட்சிக்கு வந்த போது, ஐரோப்பியர்கள் நெப்போலியனுக்கு நிகராக ஒப்பிட்டிருந்தார். அதேபோனறு தற்போதைய அமெரிக்க ஜனாதிபதி வில்லியம் புஷ் பதவிககு வரும்போது, நெப்போலியன் மீண்டும் ஆட்சிக்கு வந்துவிட்டார் என (ஆட்சிக்கு வந்த முறையையும் குறிப்பிடலாம்) விமர்சித்தனர். ஆனால், பிரான்ஸ் ஜனாதிபதியின் முதலாவது ஏழு ஆண்டுகால ஆட்சியை விட, இரண்டாவது கால ஆட்சி சற்று வித்தியாசமாகவே உள்ளது. நெப்போலியன்கள் ஆட்சிக்கு வந்தார்களோ இல்லையோ அதிகாரத்துக்கான போட்டி முதன்மையான மாற்றத்தினை உருவாக்கி வருகின்றதென்பதை நிராகரித்துவிட முடியாது.


ஜேர்மனிய அதிபர் ஜெகாட் ஸ்சூருடருடன் பிரான்ஸ் ஜனாதிபதி ஷிராக்.

ஐரோப்பியர்கள் மட்டுமல்ல ரஷ்யர்களும் - அமெரிக்காவை எதிர்பதற்காக, ஐரோப்பியருடன் இணைநதுள்ளனர். மேலும், சீனர்கள், ஐரோபபியர்களின் பிந்திய தீர்மானங்களை வரவேற்பதாக அறிவித்துள்ளனர். எனவே, ஒருவகையில் ஐரோப்பாவும், அதற்கு அப்பாலுள்ள அரசுகளும - அமெரிக்காவையும், அதன் அதிகார அடக்குமுறைக்கான போரையும் நிராகரிப்பதாக மாறியுள்ளன. சீனா நடுநிலைமை வகித்தாலும், தீர்மானத்தை ஏற்கும் நிலையிலேயே விளங்குகின்றது. இதனால் ஈராக் விடயத்தில் அமெரிக்கர்கள் தனித்து எந்த முடிவையும் உடனடியாக எடுத்துவிடமுடியாத சூழல் தற்போது காணப்படுகினறது. **Unipolar** பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கின்றது. அவ்வாறான நெருக்கடிகளின் போது வில்லியம் புஷ், ஐ.நாவை விட்டுவிலகப் போவதாகவும், தனித்துப் போரை ஈராக் மீது நிகழ்த்தப் போவதாகவும் குறிப்பிட்டிருந்தமை சாத்தியப் பாடுடையதா? என்பதும் அடுத்த கேள்வியாகும்.

ஈராக் மீது போர் தொடுப்பதற்காக நேட்டோவை ஒரு சந்தர்ப்பத்தில் நம்பியிருந்த புஷ்ஷுக்கு, தறபோது அத்தகைய உதவியும் கைநழுவும் நிலையில் உள்ளது. நேட்டோ, அமெரிக்காவின் விருப்புகளை 1949 களிலிருந்து ஓரளவேனும் பிசகாது நிறைவேற்றி வரும் அமைப்பு. ஐ.நாவானது சோவியத் யூனியன் சரிவுக்குப் பின்பு கடந்த ஒரு தசாப்தகாலம் மட்டுமே அமெரிக்காவின் முடிவுக்கு தலைசாய்த்து வந்தது. தற்போது அத்தகையநிலை இல்லாமல் போய்விட்டது போல் நேட்டோவும் மாறியுள்ளது. இச்சந்தர்ப்பத்தில் அமெரிக்கா தனித்து, பிரித்தானியாவுடன் இணைந்து மட்டுமே போர் செய்ய வேண்டிய நில்ல ஏற்படும். அப்படியான போர், உலக நாடுகள் மத்தியில் அமெரிக்கா ஏற்கனவே தயார்செய்துள்ள வலைப்பின்னலைப் பாரியளவில் பாதிக்கும். பொருளாதாரக் காரணிகளும், தகவல் தொழில் நுட்பமும் ஒரே பாணியில் உலகை ஒன்றிணைத்துள்ளது. அமெரிக்கர்கள் தயார் செய்துவரும் உலகமயப்படுத்தல் என்ற அமெரிக்க மயபபடுத்தல் அதனையே உலகத்திற்குப் போதித்துவந்தது. அத்தகைய போதனையின் விளைவுகளை உலகத்தில் உள்ள ஒவ்வொரு மனிதனும் அனுபவிக்கவேண்டும் என்பது தறபோது அமெரிக்க ஆளும் வர்க்கத்தினருக்கும் உரித்துடையதென்பது உணர்த்தப்பட்டுள்ளது. உலகத்திற்குப் போதனை செய்யும் அமெரிக்க ஆளும் வர்க்கம் - தனது பிரஜைகளுக்காகவும், தனது நாட்டுக்காகவும் ஏதேதோ தயார்ப்படுத்தலை செய்துவந்தது. ஆனால், அது அவர்களது மக்களையோ, நாட்டையோ இப்படிப பாதிக்கும் என உணரவில்லை. ஒரு வகையில் சோஷலிஸத்தின் வீழ்ச்சிக்கு சோவியத் ஆட்சியாளர்கள் செயற்பட்டதுபோல் அமெரிக்கரின் நெருக்கடிக்கு அமெரிக்க ஆட்சியாளரே காரணமாக உள்ளனர் எனக்கூறலாம்.

உலகமயப்படுத்தலில் எந்ந நாடும், எந்தப் பிரஜையும் விலகியிருக்கமுடியாது என்பதை உணர்த்துவதுடன் - எத்தகைய பொருளாதார, அரசியல், கலாசார காரணிகளும் தனித்து தவிர்த்திருக்க முடியாது என்பதை இது உணர்த்தியுள்ளது. போரைத் தனித்து அமெரிக்கா- ஈராக் மீது தொடுக்குமாயின், தற்போது சிக்கித் தவிக்கும் பொருளாதார நெருக்கடி மேலும் அபாயத்திற்குக் கொண்டுசென்றுவிடும். அததகைய நிலையை அமெரிக்கா அடைய, வில்லியம் புஷ் காரணமாக அமைந்துவிடுவாரா? ஏனெனில், ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் துருப்புக்களை அப்பகுதியில் குவித்துள்ள அமெரிக்கா, போரை எப்படியாவது - வென்றுவிட வேண்டும் என்ற அவாவில் செயற்படும். அமெரிக்க ஆளும் வர்க்கம் எத்தகைய முடிவையும் சாத்தியப்படுத்த முடியாத இக்கட்டுக்குள் அகப்பட்டுளளது. எதுவாக அமைந்தாலும் 'தனி வல்லரசு' இராணுவ ரீதியில் வல்லரசு என ஜோசைப் றை குறிப்பிடுவது எந்தளவுக்குச் சரியானது என்பது அல்லது யதார்த்தமானது என்பது நோக்கப்படவேண்டியது. ஒரு அரசு தனித்து இராணுவத்தில் பலமடைந்திருந்தால் போதுமானதா? என்பது அடுத்துள்ள வினாவாகும். அவ்வாறு இராணுவ வல்லமையை மட்டும் கொண்ட வல்லரசு நீண்ட காலம் நிலைக்க முடியாது என்பது சோவியத்தின் வீழ்ச்சி உணர்த்தும் விடயமாகும். அவ்வாறாயின் றையின் விளக்கம் எந்தளவுக்கு எதிர்காலத்தில் சாத்தியப்பாடானது?

குறிப்பாக அமெரிக்காவின் இராணுவப் பலம் பிரமிக்கத்தக்கது என்பது ஏதோ உண்மைதான். ஆனால், அதற்கான ஆதரவு என்

**கே.ரி.கணேசலிங்கம்**

பது அடிப்படையான எடுகோள் - நேட்டோவைக் கையில் வைத்துக் கொண்டு, உலகம் முழுவதும் சுற்றிவந்த அமெரிக்கா, ஐ.நாவின் பாதுகாப்புச் சபையையும், சர்வதேச நாணய நிதியமும் மற்றும் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, குழு - 8 எனப் பல அமைப்புக்களை உருவாக்கி, அவற்றுடன் ஒன்றிணைந்தும், தலைமை தாங்கியும் உலகம் மெச்சும் வல்லரசாக விளங்கியது தான். ஆனால், தற்போது எழுந்துள்ள நெருக்கடி பூரணமானதாக மாறாது தக்கவைப்பது அவசியமானது. முதலாவது ஈராக் போரின் போது அமெரிக்கப் பொருளாதாரம் பலமாக இருந்தது. தற்போது வீழ்ச்சியை நோக்கி அது அசைந்து கொணடிருப்பதால், பொருளாதாரத்தினைக் காட்டி எதனையும் சாதிக்க முடியாதுள்ள நிலைக்குத் அமெரிக்கா தள்ளப்பட்டுள்ளது.

எனவே, பிரித்தானியர் சேர்ச்சிலையும்; ஹில்டரையும் பற்றி - சிந்திக்கும் சூழல் புஷ்ஷின் தலைமைத்துவத்தால் உருவாகியுள்ளது என்பதையே முடிவாகக் கருத வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. ஆபத்துமிக்க போர் - ஆபத்தான அரசியலை உருவாக்கும் என்பதையே நினைவுபடுத்துகின்றது. ◆




# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003




# நினைத்ததை நடத்தி முடித்தவர்கள்

நியூசிலாந்து, இலங்கையுட னான ஆட்டத்தின் தோல்வி கொடுத்த ஓர்மத்துடனும், மேற்கிந்திய அணி, தென்னாபிரிக்காவை வென்ற மனோ பலத்துடனும் களம் கண்ட ஆட்டம் விறுவிறுப்புக்குக் குறைவே இல்லா மல் இருந்ததை கிரிக்கெட் ரசிகர் கள் ஏற்றுக்கொள்வார்கள்.

நியூசிலாந்து அணியை ஆடப் பணித்த மேற்கிந்தியா, குறைந்த ஓட்ட எண்ணிக்கையுடன் அவர்களை ஆட்டமிழக்கச் செய்யும் நம்பிக்கை


ஹைன்ஸ் செய்தார் - செய்தாலும்?

யைக் கொண்டிருந்திருக்கக்கூடும். ஆட்டத்தின் போக்குக்கூட ஓரளவு அந்தப்போக்கையே காட்டி நின்ற தையும் அவதானிக்கக்கூடியதாக


டிரேக்ஸ் - அற்புதம்!

இருந்தது. ஐந்து விக்கெட்டுக்கள் இழந்து 120 ஓட்டங்கள் என்ற மட் டில், 200 ஓட்டங்களுக்குள் நியூசிலாந்தை முடக்கமுடி யும் என்பதே பொதுவான கருத்தாக இருந்தது.

ஆனால், பின்வரிசையில் வந்த ஹரிஸ், மக்கலம், அன்ட்ரீ அடம்ஸ் ஆகியோர் நியூசிலாந்தை முன்வரி சையில் கொண்டுபோய் அமர்த்தி விட்டார்கள். சிறப் பாக அன்ட்ரீ அடம்ஸ் 24 பந்துகளில் சேர்த்த 35, மிக மிகப் பெறுமதி வாய்ந்ததாக அமைந்துவிட்டது.

இருந்தாலும்கூட மேற்கிந்திய அணிக்கு இது ஒரு இலக்கல்ல. ஏனெனில், தென்னாபிரிக்காவையே தோற்கடித்தவர்கள் அல்லவா அவர் கள் என்ற எண்ணமும், லாராவின் முதலாட்ட சதமும் ஒரு நம்பிக் கையை எல்லோருக்கும் கொடுத்தி ருக்கும்.

ஆனால், ஆரம்பத்திலேயே மள மளவென விக்கெட்டுக்கள் சரிய, மூன்றாவது ஓட்டத்திற்கு முயற்சித்த லாரா ரன் அவுட்டாக - பந்து விக் கெட்டில் பட்டது - திறமையா, லாரா வின் துரதிர்ஷ்டமா?. எல்லாமே தலைகீழான நிலைபோலத்தான் தெரிந்தது. இருந்தும், சர்வான் மற் றும் ஜேக்கப்ஸ் இருவரின் இணைத் துடுப்பாட்டம் ஒரு பாரிய வித்தியா சத்தைக் காட்டியது அவர்கள் இரு


மக்கலம் ஆட்டமிழக்கவல்ல ஆபத்தில்!

வரும் ஆடியவிதம். இளம்புயல் சர்வான் அடித்தாட, அனுபவம் வாய்ந்த ஜேக்கப்ஸ் துணையாக நின்று நிதானமாக விளையாடி யமை நிச்சயம் மேற்கிந்தியாவை வெற்றியின் பக்கம் மெதுமெதுவாக அழைத்துச் சென்றது.

சர்வானின் ஆட்டமிழப்பு மேற்கிந் தியஅணிக்கு ஒரு இடியாகத்தான் இருந்திருக்கும். இருந்தும் சர்வான் போக, வந்த டிரேக்சுக்குத் தன் பாணியிலான பணியைக் கொடுத்து விட்டு அடித்தாடியமை அற்புதமாக இருந்தது.

மீண்டும் ஒரு பரபரப்பு இருந்தது. இறுதி முடிவு நியூசிலாந்து அணிக் குச் சாதகமாக முடிந்தது. NZ தம் BLACK CAPS ஐப் பெருமையுடன் சற்றுத் தூக்கிவிட்டுக் கொண்டார் கள். நியூசிலாந்தின் களத்தடுப்பு அபாரம். அவர்கள் எடுத்த CAT-CHES என்ன உயர்தரம். மேற்கிந்தி யாவின் வெற்றியைத் தடுத்து நிறுத் தியதில் இரண்டு விடயங்கள் முக்கியம்.

ஒன்று அணியின் அற்புதமான களத்தடுப்பு (TREAT TO WATCH).

அடுத்தது அன்ட்ரீ அடம்ஸ். இவரே MAN OF THE MATCH.

மிக அருமையான ஆட்டமொன் றைத் தந்த இரண்டு அணியினருக் கும் எதிர்வரும் ஆட்டங்களிலும் எம் நல்வாழ்த்துக்கள்.

- நிம்மி.

# இது ஒரு STAR WAR


மும்மூர்த்திகள் - இன்று சாதிப்பார்களா? சொதப்புவார்களா?

மைதானம் அமைந்துள்ள இடத்துக்கு நல்லதொரு பெயர் CENTURIAN. சந்திக்கப்போகும் அணிகளும் அந்தமாதிரி. இரண்டு அணிகளிலுமே சதம் என்பது சர்வசாதாரணமென நிரூபிக்கும் ஆட்டக்காரர்கள் அநேகர் (2003 உலகக் கிண்ணப் போட்டிகளில் CENTURY சாதாரணமான விடயமாக அல்லவா மாறிவிட்டது). கில்கிரிஸ்ட், சேவாக், ஹேடன், சச்சின், திராவிட், பொன்ரிங் காணும்... காணும்... இந்தியா, அவுஸ்திரேலியா இரண்டும் ஒவ் வொரு வெற்றிகளுடன். (இலகுவில் பெற்ற வெற்றிகள் அல்ல). மிகச் சிறந்த பந்துவீச்சு அணியொன்று அவுஸ்திரேலியாவுக்கு உள்ளது என்பது மட்டும்தான், அவர்களின் PLUS POINT. ஆனால், சிறிநாத், கும்ப்ளேயின் அனுபவம், ஷாகிர் கானின் விஷ வேகம் இரண்டுமே கவனத்தில் கொள்ளப் படவேண்டும். சக்கரங்கள் சுழல்வது இயற்கை. அவுஸ்திரேலிய அணியில் சிறப்புத்துறை வீரர்கள்தான் அதிகம் (BOWLING OR BATTING). ஆனால், இந்திய அணியில் ALL ROUNDERS ஒரு BONUS. ஷேவாக் வெறிகொண் டால், கங்கூலி கர்ச்சிக்கத் தொடங்கினால், யுவராஜ் தன்னை சக்கரவர்த்தி யாக எண்ணினால், கைப் கசப்பு மருந்து கொடுக்கத்தொடங்கினால் நினைத்ததும் நடக்கும். நினைக்காததும் நடக்கும். கங்கூலி களத்தில் முரட்டுத்தனம் கூட என்று விமர்சனமும் உண்டு. ஆனால், அண்மைக்கால


பொன்ரிங், மக்ரா - அவுஸ்திரேலியாவின் அசுரவீரர்கள்.

அனுபவங்கள் அவுஸ்திரேலிய அணியுடன் விளையாடும்போது, கொஞ்சம் "உறைப்பு" கூடுதலாக இருப்பது தேவைதான் போலத்தெரிகின்றது. பொன் ரிங் அடக்கிவாசிக்கும் CAPTAIN. அன்ட்ரீ சிமன்ஸ் அடங்காத ஏறு. மக்ரா + லீ + ஜிலெஸ்பி = சூறாவளி. மைதானத்தின் பெயருக்குகேற்ப கிரிக்கெட் ரசிகர்கள் SUPER SPORTSஐ எதிர்பார்க்கிறார்கள். அதனை நிச்சயம் அவுஸ்திரேலிய, இந்திய அணியினர் கூட்டாக இணைந்து தரப்போ கின்றார்கள். இன்றைய ஆட்டத்தின் நடுவர்கள் டேவிட் ஷெப்பர்ட், அசோக டீ சில்வா. டேவிட் ஷெப்பர்ட் வகுப்பறைக் கட்டுப்பாட்டை எதிர்பார்க்கும் நடுவர். இரண்டு அணிகளும் கவனமாக இருக்க வேண்டும். எழுதப்படப்போ கும் எண்ணிக்கைகள், விக்கெட்டுக்கள் உங்களுக்கு உச்சக்கட்டப் பர பரப்பு மகிழ்ச்சி, THRILL எங்களுக்கு!, O.K. AUSSIES, AND INDIA?

- ராஜேஸ்.

# இது மந்திர ஜாலமல்ல, உண்மை


சமிந்த - சாய்த்தாரே தன் பக்கம் சாதனையை!

நல்லவேளை Technology வளர்ந்துவிட் டது. இல்லாவிட்டால், நேற்று இலங்கை அணி யின் பந்துவீச்சாளர் சமிந்த வாஸ் நிகழ்த் திய சாதனையை சில ஆயிரம் ரசிகர்கள் மட் டும் கண்டுகளித்தாக முடிந்திருக்கும்.

ஆனால், இது லட் சோபலட்சம் ரசிகர்கள் கண்டுகளிக்கவும், ஆவ ணப்படுத்தி வைத்தி ருக்கவும் என்றே நிகழ்த தப்பட்ட சாதனை.

இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடியிருக் கலாம். ஆனால், கண் ணியவான் சனத், வேறு மாதிரி யோசித்திருக்கி றார். பீட்டர் மரிட்ஸ் பேர்க்கில் 2003 உலகக் கிண்ணப் போட்டியின் முதலாவது ஆட்டம். பங்களாதேஷ், இலங்கை அணி இரண்டுக்கும் இரண்டாவது ஆட்டம். ஆட்டத்தின் முதலாவது பந்தை வீச ஓடிவருகிறார்

மைதானத்தில் ஒரு ஆவணம்




சமிந்த வாஸ். பந்து கையிலிருந்து அகன்றது. Off Stump ஒரு முறை விதிர்விதிர்க்கிறது. பேல்ஸ் எகிறுகிறது. ஹன்னாண் சர்வார் பவிலியன் திரும்பு கிறார். முகமட் அஷ்ரபுல் களத்திற்குள் வருகிறார். உரிய கைங்கரியங்கள் முடிய, சமிந்த வாஸ் இரண டாவது பந்தை வீசுகிறார். சென்ற பந்து பூமராங் மாதிரி அவருடைய கையிலேயே திருப்பதி லட்டுப் போல வந்து விழுகிறது. இரண்டாவது பந்து இரண் டாவது விக்கெட். அடுத்து இஷானுல் ஹக் வரு கிறார். இந்த விக்கெட் சரிந்தால் வாஸ் கற்ரிக் (Hattrick) சாதனை புரிவார். முடியுமா? மூன்றாவது பந்தை வீசுகிறார் சமிந்த வாஸ். பந்து Bat இல் பட்டு எகிறி Slips இல் நிற்கும் மஹேலவின் இராட்சதக் கரங்களுக்குள் சிக்குகிறது. இனி என்ன தேவை. உலகக் கிண்ணக் கிரிக் கெட் ஆட்டத்தில் முதன்முதலில், முதல் ஓவரின் முதல் மூன்று பந்து களில் தொடர்ந்து விக்கெட் எடுத்து Hattrick எடுத்து உலக சாதனை நிகழ்த்தியுள்ள அற்புதமான வீரன் சமிந்த வாஸ். இதுமட்டுமல்ல, முத லாவது ஓவரிலேயே இன்னொரு விக்கெட்டும் எடுத்து நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றிக் கொண்டார்.



- சரண்யன்.

## நாளும் ஒரு வினா

உலகக் கிண்ணப் போட்டியொன்றில் பெறப்பட்ட

அதிகூடிய இணைப்பாட்ட எண்ணிக்கை என்ன?

318 - 2 ஆம் விக்கெட் இணை கங்கூலி, திராவிட் எதிர் இலங்கை (1999)

# உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

## பங்களாதேஷ் அணி எதிர் இலங்கை அணி

### பங்களாதேஷ் அணி

| | ஓட்டங்கள் | பந்துகள் | நான்குகள் | ஆறுகள் |
|---|---|---|---|---|
| சர்க்கார் | 00 | 1 | 0 | 0 |
| ஷகாரியர் | 10 | 13 | 1 | 0 |
| அஷ்ரபுல் | 00 | 1 | 0 | 0 |
| ஹிசானுல் | 00 | 1 | 0 | 0 |
| சன்வார் | 04 | 2 | 1 | 0 |
| ஆலோக் | 32 | 37 | 2 | 1 |
| மக்பூத் | 20 | 67 | 2 | 0 |
| றபீக் | 06 | 16 | 0 | 0 |
| பைஸ்யா | 05 | 19 | 0 | 0 |
| மொர்த்தாஸா | 28 | 23 | 4 | 1 |
| இஸ்லாம் (ஆ.இ.) | 03 | 9 | 0 | 0 |
| உதிரிகள் | 16 | | | |

மொத்தம் 31.1 ஓவர்களில் சகல விக்கெட் இழப்புக்கு - 124

### இலங்கை அணி

| | ஓட்டங்கள் | பந்துகள் | நான்குகள் | ஆறுகள் |
|---|---|---|---|---|
| அத்தபத்து (ஆ.இ.) | 69 | 71 | 11 | 0 |
| சனத் (ஆ.இ.) | 55 | 57 | 7 | 1 |
| உதிரிகள் | 02 | | | |

மொத்தம் 21.1 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி - 126.

### பந்து வீச்சு - இலங்கை அணி

| வீரர்கள் | ஓவர் | கன்னி ஓவர் | ஓட்டங்கள் | விக்கெட்டுக்கள் |
|---|---|---|---|---|
| வாஸ் | 9.1 | 2 | 25 | 6 |
| நிசங்க | 5 | 0 | 22 | 0 |
| தில்ஹாரா | 7 | 0 | 47 | 1 |
| முரளி | 10 | 4 | 25 | 3 |

*நடுவர்கள்* : பி.எப்.போடன், ஆர்.பி.டிபின்
*மைதானம்* : பீட்டர் மரிட்ஸ்பேர்க்

### பந்து வீச்சு - பங்களாதேஷ் அணி

| | | | | |
|---|---|---|---|---|
| இஸ்லாம் | 6 | 1 | 22 | 0 |
| மொர்த்தாஸா | 5 | 0 | 38 | 0 |
| பைஸ்யா | 3 | 0 | 21 | 0 |
| றபீக் | 4.1 | 1 | 22 | 0 |
| சன்வார் | 2 | 0 | 14 | 0 |
| ஆலோக் | 1 | 0 | 09 | 0 |

உலகக் கிண்ண கிரிக்கெட்-2003 இல் நேற்று ஆறா வது நாள் போட்டியில் பங்களாதேஷ் அணியை 10 விக்கெட்டுக்களால் இலங்கை வென்றது.

*சிறப்பாட்டக்காரர் - சமிந்த வாஸ் (இலங்கை)*

*இதுவரை இலங்கை பெற்ற புள்ளிகள் - 08*

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland



அமெரிக்காவுக்கெதிராக முஸ்லிம் அமைப்புக்களும், பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பியும் கொழும்பில் நேற்று நடத்திய ஆர்ப்பாட்டத்தில்- ஜே.வி.பியின் விமல் வீரவன்ச, அமெரிக்க தேசியக் கொடியை, அந்நாட்டின் தூதரகம் முன்னால் எரிப்பதைப் படத்தில் காணலாம்.

# ஊடகவியலாளர் மீதான தாக்குதல்; கிழக்கிலங்கை செய்தியாளர் கண்டனம்

(மட்டக்களப்பு)

மானிப்பாயில் இரு தமிழ் ஊடக வியலாளர்கள் மீது படையினர் மேற்கொண்ட மிகமோசமான தாக்கு தல் குறித்து, கிழக்கிலங்கை செய் தியாளர் சங்கம் கண்டனத்தைத் தெரிவித்திருக்கும் அதேவேளை, தாக்குதலை நடத்திய படையினர் மீது சட்ட நடவடிக்கை எடுத்து, அவர்களுக்குத் தண்டனை வழங்கு வதுடன் சேதமாக்கப்பட்ட கமராக்க ளுக்கு நஷ்டஈட்டை, தாக்குதல் நடத்தியவர்களிடமிருந்து பெற்றுக் கொடுக்க வேண்டும் எனப் பிரதமர், பாதுகாப்பு அமைச்சர், தொடர்பாடல் அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் கேட்டுள் ளது.

தினக்குரல் செய்தியாளர் சிவபா லன், நமது ஈழநாடு செய் தியாளர் மனோகரன் ஆகியோர் தாம் செய்தி யாளர் என அடையாள அட்டை யைக்காட்டி உறுதிப்படுத்திய பின் னரும் அவர்ளது கமராவைப் பறிதது சேதப்படுத்தியதுடன் கடுமையாகத் தாக் கியுமுள்ளனர் படையினர். இது தற்செயலாக நடந்த சம்பவம் அல்ல.

ஒரு சம்பவம் நடைபெற்றால் அந்த இடத்திற்குச் சென்று உண் மைநிலையை அறிந்து வெளியி டும் உரிமை ஊடகவியலாளர்க ளுக்கு உண்டு. அந்த உரிமையை மறுக்கும் வகையில் படையினர் நடந்து[illegible] கின்றனர்.

எனவே, ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்திய படையினரைக் கைதுசெய்து நீதிமன்றில் நிறுத்தி, அவர்களுக்கு எதிராக சட்ட நடவ டிக்கை எடுக்கவேண்டும். அத்துடன், சேதமாக் கப்பட்ட கமராக்களுக்கான நஷ்டஈட்டை வழங்க வேண்டும் என் றும் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் கேட்டுள்ளது.

## திருமறைக் கலாமன்றத்தின் கம்பன் மகன் நூல் வெளியீடு

திருமறைக்கலாமன்றத்தின் கம்பன் மகன் நாட்டுக்கூத்து நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற் றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ். மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து வரும் மாதம் 1ஆம், 2 ஆம் திகதிகளில் நாட்டுக்கூத்து மேடையேற்றப்படவும் உள்ளது.

## அரச...

இதேவேளை பகுப்பாய்வுத் திணைக்களத்தின் பரிசோதனைக் காகக் கொண்டுவரப்பட்டிருந்த வெடி மருந்துகள், ஆயுதங்கள் வைக்கப் பட்டிருந்த பகுதிக்குள் தீ பரவாது தடுக்கப்பட்டது.

தீயணைப்புப் படையினர் உடன டியாக ஸ்தலத்திற்கு வந்தபோதும், பகுப்பாய்வுத் திணைக்களத்திலிருக் கும் ஆவணங்கள் பலவும் காகிதங் கள் வடிவில் இருந்ததால், உள்ளே நீர் பாய்ச்சித் தீயை அணைக்க முடியாமல் அவர்கள் தயங்கியதா கவும் சம்பவ இடத்திலிருந்து நமது நிருபர் தெரிவித்தார்.

அதேவேளை - பரவிய தீ நேற்று நள்ளிரவிலேயே அணைக் கப்பட்ட போதும், எதற்கும் தயாராக, தீய ணைப்பு வாகனங்கள் அப்பகுதியில் தொடர்ந்து இன்று அதிகாலைவரை தரித்து நின்றன. (200)

## மானிப்பாய்...

செல்ல, அவர்களின் பின்னால் பாட சாலை மாணவர்களும், கல்வியியற் கல்லூரி மாணவர்களும் மற்றும் கூட்டுறவு, திணைக்கள ஊழியர்க ளும், பொது அமைப்புக்களின் பிரதி நிதிகளும், பொதுமக்களும் பல் வேறு வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகளை ஏந்தி கோஷங்களை எழுப்பியவாறு பேரணியாகச் சென்ற னர்.

யாழ். பொது நூலகத்திலிருந்து ஆரம்பமான இப்பேரணி, மணிக்கூட் டுச் சந்தி வழியாக மணிக்கூட்டுக் கோபுர வீதியை வந்தடைந்து, அங் கிருந்து ஆஸ்பத்திரி வீதி வழியால் வந்து, வேம்படிச்சந்தியை அடைந்து, அங்கிருந்து பலாலி வீதி வழியாகச் சென்று ஆரியகுளச் சந்தியை அடைந்தது.

ஆரியகுளம் சந்தியில் பேரணி யில் கலந்து கொண்டவர்கள் சுற்றி நிற்க, ஆரியகுளம் இராணுவ காவ லரணுக்கு முன்னிலையில், இரா ணுவத்தினரும் பார்க்க - ஜனாதிபதி சந்திரிகாவினதும், வடபகுதி இரா ணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவினதும் கொடும் பாவிகள் ஆர்ப்பாட்டப் பேரணியில் வந்தவர்களால் எரிக்கப்பட்டன.

பின்னர், இங்கிருந்து ஆர்ப்பாட் டப் பேரணி ஸ்ரான்லி வீதி வழியாக கோயில் வீதியை அடைந்து, அங்கி ருந்து போர் நிறுத்தக் கண்காணிப் புக் குழுவின் யாழ். மாவட்ட அலுவ லகத்தை வந்தடைந்தது.

பின்னர், காலை 11.30 மணி யளவில் மகஜர் கையளிக்கும் வைபவம் இடம்பெற்றது. இதன் போது, போர்நிறுத்தக் கண்காணிப் புக் குழுத் தலைவர் ஒலே புரூண் டம் முன்னிலையில், யாழ். பல்க லைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் நிலைமையை விளக்கி உரையாற்றினார்.

அண்மையில் மானிப்பாயில் பெண் போராளிகள் மீதும், பொது மக்கள் மீதும் - இராணுவத்தினர் நடத்திய கண்மூடித்தனமான தாக்கு தலைக் கண்டித்தும், எதிர்காலத் தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் தடுக்கவும் கோரி, மகஜர் ஒன்றினை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ். மாவட்டப் பொறுப்பதிகாரி ஒலே புரூண்டத்திடம் மகளிர் அமைப்பின் பிரதிநிதி தர்மினி கையளித்தார். (லி,60,46)

# உலர் உணவு விநியோகத்தில் பால்மா மீண்டும் கிடைக்கும்

## நிவாரண பெறுமதியை அதிகரிக்க கோரிக்கை

இலவச உலர் உணவு விநி யோகத்தின்போது, மீண்டும் பால்மா விநியோகம் செய்யப்படவுள்ளது.

யாழ். செயலகம் மேற்படி நடவ டிக்கையை எடுத்துவருகிறது. யாழ். செயலகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் இவ்விடயம் குறித்து ஆராயப்பட்டுள்ளது.

பிரதேசச் செயலர்கள் மற்றும் கூட்டுறவுச்சங்கத் தலைவர்கள் கலந்துகொண்ட இக்கூட்டத்தில், தற்போது வழங்கப்பட்டுவரும் உலர் உணவு நிவாரணப் பெறுமதியை அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சிவ மகாராஜா மேற்படி கோரிக்கையை முன்வைத்தார். விலைவாசி உயர்வு காரணமாக தற்போது வழங்கப்பட்டு வரும் நிவாரணம் போதுமானதாக இல்லை என்றும் அவர் அரச அதி பரின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

மேலும், நிவாரண விநியோகத் துக்காக பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் சேவைக் கட்டணத்தை அதிகரிக் கும்படியும் கோரிக்கை முன்வைக் கப்பட்டது.

# அபிவிருத்தி தேவைகளை இனம்காண அடுத்தவாரம் சிறானில் உயர் மாநாடு

## உலகவங்கி, ஆசியஅபிவிருத்தி வங்கி பங்குபற்றும்

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் தேவைகளை இனங்காண்பதற் காக, உலக வங்கி, ஆசிய அபிவி ருத்தி வங்கி மற்றும் ஐக்கிய நாடு களின் பிரதிநிதிகளின் மாநாடு, இம்மாதம் 20 ஆம் திகதி காலை 9 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட 'சிறான்' அலுவலகத்தில் நடைபெற இருப்பதாக சிறான் பணிப்பாளர் செல்வின் தெரிவித்தார்.

இம மாநாட்டில் வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜா மற்றும் மாகாண அமைச்சின் செயலாளர்கள் மற்றும் வடக்கு - கிழக்கு மாவட்ட அரச அதிபர்களும் கலந்துகொள்ளவுள் ளார்கள்.

சிறான் ஏற்பாட்டில் மாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு தொடர் பான அடுத்த கூட்டம் இம்மாதம் 27,28 ஆம் திகதிகளில் திருமலை யில் நடைபெறும் என்றும் அறி விக்கப்பட்டுள்ளது. (க)

## வடமராட்சியில் கொடும்பாவிகள்...

வரினதும் கொடும்பாவிகள் உடுப்பிட் டிச் சந்தியிலிருந்து, சந்தைவரை இழுத்துச் செல்லப்பட்டு சந்தைக்கு முன்பாகத் தீயிட்டு எரிக்கப்பட்டன.

அதேபோல், 8 மணியளவில் பருத் தித்துறையில் வேலாயுதம் மகா வித் தியாலயம் முன்பாக இருவரினதும் உருவங்கள் இரு பாடைகளில் வைத் துக் காவிச்செல்லப்பட்டு மெத்தைக் கடைச்சந்தியில் வைத்துத் தீயிட்டு எரிக்கப்பட்டன.

நெல்லியடியிலிருந்து 4 மணி யளவில் கொடும்பாவிகள் வாகனம் ஒன்றில் ஏற்றிச் செல்லப்பட்டு மாலு சந்தியில் வைத்து எரிக்கப்பட்டன.

இந் நிகழ்வில் கூட்டுறவு அமை ப்புக்கள், வர்த்தக அமைப்புக்கள், வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் எனப் பல்வேறு அமைப்புக்களின் பிரதிநிதி கள், பாடசாலை மாணவர்கள், பொது ம்க்கள் எனப் பலர் கலந்துகொண் டனர்.

இந்தச்சம்பவம் நடந்து கொண் டிருந்தவேளை, அப்பகுதிகளில் பிர சன்னமாகியிருந்த இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்டப் பிரதிநிதிகள் நிகழ் வுகளைப் படம்பிடித்துச் சென்றுள் ளனர்.

இதேவேளை - தென்மராட்சி பிரதேசத்தின் சாவகச்சேரி, சங்க த்தானை, புத்தூர்ச்சந்தி, கொடி காமம் ஆகிய பிரதேசங்களிலும்-

நேற்று யாழ்ப்பாணத்தில் நடை பெற்ற பேரணிக்கு ஆதரவு தெரி வித்து, வீதிகளில் ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டன.

இதனால் இப்பகுதிகளில் போக் குவரத்துக்கள் தடைப்பட்டன. அத் துடன், கொடிகாமம் சந்தையில் ஜனாதிபதி சந்திரிகாவின் கொடும் பாவியும் எரிக்கப்பட்டது. பின்னர் அங்குவந்த இருபதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் எரிக்கப்பட்ட ஜனா திபதியின் கொடும்பாவியை அங்கி ருந்து அகற்றினர். (ச,25)

# மாநகரசபை உறுப்பினர் ராஜினாமா; உத்தியோகபூர்வமாக கிடைக்கவில்லை

யாழ். மாநகரசபைக்கு விசேட ஆணையாளர் ஒருவரை நியமிப்பது குறித்து இதுவரை தீர்மானம் எது வும் எடுக்கப்படவில்லை.

யாழ். மேயர் உட்பட மாநகர சபையின் அனைத்து உறுப்பினர்க ளும் இராஜினாமாச் செய்தமை குறித்து இதுவரை தமக்கு உத்தி யோகபூர்வமாக அறிவிக்கப்பட வில்லை என்று, வட-கிழக்கு ஆளு நர் அலுவலக அதிகாரிகள் தெரி வித்தனர்.

மேற்படி இராஜினாமாக் குறித்து உத்தியோகபூர்வமான உறுதிப்படுத் தப்பட்ட தகவல் கிடைத்ததும் தாம் விசேட ஆணையாளர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கவிருப் பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆளுநர் அலுவலகத்தில் இவ் விடயம் தொடர்பாக விசேட கூ[illegible]ம் ஒன்று நேற்று நடைபெற்றது. இதன் போது எதிர்வரும் 17 ஆம் திகதியு டன் உள்ளூராட்சி சபைகளின் பத விக்காலம் முடிவடைவதால், அனைத்து சபைகளுக்கும் விசேட ஆணையா ளர்களை நியமிப்பது குறித்து விரி வாக ஆராயப்பட்டது.

மேற்படி நியமனங்கள் குறித்துத் தாம் மிகவிரைவாகத் தீர்மானம் எடுக்கவிருப்பதாகவும் வட-கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலா ளர் எஸ்.ரங்கராஜா தெரிவித்தார்.(க)

# மீட்கப்படாத அடகு நகைகள் இன்று ஏலத்தில் விடப்படும்

மீட்கப்படாத அடகு நகைகளை யாழ். மக்கள் வங்கி, இன்று ஏலத்தில் விற்பனை செய்யவுள்ளது.

கடந்த 1984 ஆம் ஆண்டு டிசம்பர் இறுதிவரை மக்கள் வங்கிக் கிளைகளில் அடைவு வைத்து இதுவரை மீட்காதவர்களின் தங்க நகைகள், இன்று காலை 9.00 மணியளவில் யாழ்.ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கிக கிளையில் ஏல விற்பனை மூலம் விற்கப்படவுள்ளன.

# இடுப்புப்பட்டி கட்டுப்பாடுகள் 24 இல் மீளாய்வுக்குள்ளாகும்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இடுப்புப் பட்டி அணிந்து, இராணுவக் கட்டுப் பாட்டுப் பிரதேசத்துள் வருவதான புதிய நடைமுறைகள், வரும் 24 ஆம் திகதியன்று மீளாய்வு செய்யப் படவிருப்பதாகவும் - அதுவரை, போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பிரகா ரம் - இடைக்கால ஏற்பாடு ஒன்று உடனடியாக அமுலாவதாகவும், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக கண்காணிப்புக் குழு வெளியிட்ட பத்திரிகை அறிக் கையின்படி -

போர்நிறுத்த ஒப்பந்தத்தின் பந்தி 3.1 இன்படியான நான்கு விடயங்கள் இடைக்கால ஏற்பாடாக உடனடியாக அமுலாக்கப்படுகின்றன.

இதன்படி - இராணுவச் சீரு டையை ஒத்த இடுப்புப்பட்டிகளை புலிகள் அணிந்திருந்தால் - படையி னரின் சோதனை நிலைகளினு[illegible]க நுழையும்போது, அவற்றைப் புலிகள் தாமாக அகற்றிக் கொள்வார்கள். அவ்வாறான இடுப்புப்பட்டியை அணிந்து கொண்டு, இராணுவக் கட் டுப்பாட்டுப் பகுதிக்குள் நடமாடமாட் டார்கள்.

புலிகள் இராணுவச் சீருடையை ஒத்த இடுப்புப்பட்டிகளை அணிந்து வந்து அகற்றச் சம்மதிக்காத பட்சத் தில் அவர்கள் பயணத்தைத் தொடர அனுமதிக்கப்படமாட்டார்கள்.

அவ்வாறு உள்நுழைய முற்சித் தால் படையினர், கண்காணிப்புக் குழுவினரை அழைக்க வேண்டும்.

கண்காணிப்புக்குழு, நேரடியாக விடயத்தை ஆராய்ந்து - பிரச்சினை தீவிரமாகாது தடுக்க முனைந்து ஆலோசனைகள் வழங்கும்.

- எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தியத் தலையீட்டை....

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் விரும்புகின்றனர். சமாதான முயற்சி களில் இந்தியாவின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது.

ஆனால், இலங்கையின் சமா தான முயற்சிகளில் இந்தியாவைத் தலையீடு செய்யுமாறு ஜப்பானிய அரசாங்கம் வேண்டுகோள் விடுக்க மாட்டாது.

இலங்கைக்கு ஜப்பானிய அர சாங்கம் வழங்கி வருகின்ற உதவி கள் குறித்து இந்தியாவுக்கு எடுத்து விளக்கிவருவதாக குறிப்பிட்ட ய[illegible] அகாஷி, சமாதான முயற்சிகளை மேற்கொள்ளும் நோர்வேக்கு பாராட் டுத் தெரிவித்தார்.

அத்துடன், ஆறாவது சுற்றுப் பேச்சுக்கள் ரோக்கியோவில் நடை பெறும்போதும், அதில் அரசியல் விடயங்கள் குறித்துப் பேசப்படும் எனத் தாம் எதிர்பார்ப்பதாகக் குறிப் பிட்ட அகாஷி, தாம் இந்த விடயத் தில் ஒருபோதும் தலையிடமாட்டோம் என்றும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 15.02.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.